திருவள்ளுவர் ஆண்டு 2042

நவம்பர் - 2011

# செந்தமிழ்

தொகுதி : 56
பகுதி : 1

விலை ரூ. 10/-

## திங்கள் இதழ்



மதுரைத் தமிழ்ச்சங்கம் 14-09-1901 THE MADURAI TAMIL SANGAM

மதுரைத் தமிழ்ச் சங்க வெளியீடு




2010-2011ஆம் ஆண்டு பொதுக்குழுக் கூட்டத்தில் கல்லூரிச் செயலர் உரை ஆற்றுகிறார்.
உடன் தமிழ்ச்சங்கத்தலைவர், துணைத்தலைவர் மற்றும் தமிழ்ச்சங்கச் செயலர் அவர்கள்.
உள்படம் : பொதுக்குழு உறுப்பினர்கள்

# செந்தமிழ்

(தோற்றம் 1903)

தொகுதி : 56 திங்கள் இதழ்

பகுதி : 1 திருவள்ளுவர் ஆண்டு 2042

நவம்பர் 2011



வள்ளல் பாண்டித்துரைத்தேவர்

21.03.1867-02.12.1911

| இதழ்க் கட்டணம் | உள்நாடு | வெளிநாடு |
| --- | --- | --- |
| ஆண்டுக் கட்டணம் | ரூ. 100 | ரூ. 600 |
| ஆயுள் கட்டணம் | ரூ. 1000 | |
| புரவலர் கட்டணம் | ரூ. 5000 | ரூ. 6000 |
| தனி இதழ்க் கட்டணம் | ரூ. 10 | |

**முகவை மன்னர் நா. குமரன் சேதுபதி**

தலைவர்,

மதுரைத் தமிழ்ச்சங்கம்.

---

**ஆசிரியர்**

**இரா. அழகுமலை எம்.ஏ., எம்.ஃபில்.,**

செயலாளர்,

மதுரைத் தமிழ்ச்சங்கம்,

மதுரை.

# பொருளடக்கம்


| | | |
|---|---|---|
| முழங்குகடல் முழவின் முசிறி | வி. நாகசுந்தரம் | 4 |
| தொல்காப்பியம் சுட்டும் மகளிர் வாழ்வியல் | க. முருகேசன் | 8 |
| தமிழும் ஆங்கிலமும் : இலக்கண ஒப்புமை – ஒலிப்பு முரண் – ஒரு பார்வை | பேராசிரியர் வெ. பெருமாள்சாமி எம்.ஏ., பி.காம். | 12 |
| திருப்பட்டீச்சரம் திருப்பதிகத்தில் மழபாடி வருவது ஏன்? | தா. குருசாமி தேசிகர் | 18 |
| நால்வர் பெற்ற அருள் | முனைவர் சுப. அண்ணாமலை | 22 |
| ஸ்ரீமத் குமரகுருதாச சுவாமிகளின் அருள் வாழ்வும் திருப்பா இலக்கியமும் | திருமதி. ச. வனிதா | 27 |
| அகநானூற்றில் ஒரு பொருட் பல சொற்கள் | பெ. முருக லெட்சுமி | 35 |


## பைந்தமிழ் வள்ளல் பாண்டித்துரைத்தேவர் வாழ்த்து

ஞானத்தை ஆய்ந்துகண்டார்; ஞானமும் தமிழில்கண்டார்
ஊனத்தை நீக்குஞ்சைவ நெறியினை உணரவைத்தார்
மானத்தைக் காக்கவந்தார்; மதுரையில் சங்கம்வைத்தார்
வானத்தார் வாழ்த்த வந்தவள்ளல் பாண்டித்துரை வாழிவாழி !

தருமையாதீனப் புலவர்
– குருசாமி தேசிகர் –

# இதழ் மணம்

## அன்புடையீர்,

## செந்தமிழ் வாசகர்களுக்கு வணக்கம்.

அன்புடையீர்,

வள்ளல் பொன். பாண்டித்துரைத்தேவர் அவர்களின் நூற்றாண்டு நினைவு நாளினை (2011, திசம்பர், 2ஆம் நாள்) ஒட்டி நவம்பர் மாதச் செந்தமிழ் இதழினை உங்கள் கைகளில் தவழ விடுவதில் மதுரை நான்கம் தமிழ்ச்சங்கம் பெருமையடைகிறது. முசிறிக்கடல் முழக்கம், முழுவொலியாகத் தொடர்கிறது. முசிறித் துறைமுகப்பட்டினம் எங்கு இருந்தது என்பதைக் கண்டறியும் ஆய்வு வெற்றிபெற்று இருப்பதை அறிஞர் வி. நாகசுந்தரம் தெளிவுபடுத்தியிருக்கும்விதம் வியப்பிற்குரியது.

*அச்சமும் நாணும் மடனும் முந்துறுதல்*
*நிச்சமும் பெண்பாற் குரிய என்ப*

என்ற நூற்பா மேற்கோளோடு பண்டைய மகளிரின் பண்பு நலன்கள் க. முருகேசன் அவர்களால் தெளிவுபடுத்தப்பட்டு இருக்கிறது.

'தமிழும் ஆங்கிலமும் இலக்கண ஒப்புமை – ஒலிப்பு முரண் ஒரு பார்வை' என்ற தலைப்பில் நான்காயிரம் ஆண்டுகளுக்கு முன்பு பிறந்த மொழிக்கும் நானூறு ஆண்டுகளுக்குப் பின்பு பிறந்த கலப்பின மொழிக்கும் ஏற்பட்டுள்ள ஒற்றுமை வேற்றுமைகளைப் புதிய நோக்கில் ஆய்வு செய்துள்ள வெ. பெருமாள்சாமி அவர்கள் பாராட்டிற்குரியவர்.

திருப்பட்டீசுவரத்தில் திருமழபாடியில் சோழப்பேரரசின் மான உறவும், மதிப்பீடும் பற்றி குருசாமி தேசிகர் அவர்கள் வெளிப்படுத்தியிருக்கிறார். கவிதைப் பிரியர்களுக்காகப் பாண்டுரங்கன் அவர்களின் 'இளவேனிலும்' ஆறுவிரல் ஐம்பொறி அவர்களின் 'தமிழ் செழிக்கும்' கவிதையும் இம்மாத இதழில் இடம் பெற்றதோடு, ஸ்ரீமத் குமரகுருதாச சுவாமிகளின் வாழ்வையும் வாக்கையும் திருமதி வனிதா அவர்கள் இடம் பெறச் செய்துள்ளார். சிவகாசி முருகலட்சுமியின் 'அகநானூற்றில் ஒருபொருட் பல சொற்கள்' ஆய்வுக் கட்டுரை படித்தவர்களால் பாராட்டுப்பெறும் என்பதில் ஐயம் இல்லை. இவைபோன்ற மிகச் சிறந்த இலக்கிய, இலக்கணக் கட்டுரைகளைத் தாங்கி வருவதோடு பணப்பயனுக்காக எந்த விளம்பரமும் ஏற்காத ஒரே இதழ் நமது செந்தமிழ் இதழ் மட்டுமே என்பதை அறிஞர் பெருமக்கள் அறிவீர்கள் தானே !

**முனைவர் க. சின்னப்பா**

**இனி நீங்களும் இதழும்....**

# முழங்குகடல் முழவின் முசிறி

## (சென்ற இதழின் தொடர்ச்சி)

வி. நாகசுந்தரம்
சென்னை

## சுரங்கம்

சுருங்கை என்பது கிரேக்க மொழிச் சொல் சுரங்கம் என்றும் கூறப்படும். இது பூமிக்குள் அமைக்கப்படுவது. 'சுருங்கை நெடுவழி' (பரிபாடல் 20 : 104) 'சுருங்கை வீதி' (சிலம்பு 14:65) 'சுருங்கை - கரந்துறை ஒழுகு நீர் புகுகையை ஒருத்தருமறியாதபடி மறைத்துப் படுத்த வீதி - அரும்பதவுரையாசிரியர்.

இனி...புன்னாரு பற்றிக் காண்போமா?

கட்டூர் அல்லது கிட்டூரைத் தலைநகராகக் கொண்டு புன்னாட்டைக் குரு நில மன்னன் ஆண்டு வந்தான். நவமணிகளில் கோமேதகம் ஒரு வகை. நீலம், பச்சை, பழுப்பு, முதலான பல நிறங்கள் கோமேதகத்தில் உண்டு இவைகளில் நீல நிறமான கோமே தகங்களை உரோமா 'அக்வாமரினா' (Aqua Marina) என்றனர். அது புன்னாட்டைத் தவிர வேறெங்கும் விளையாது ஆகவே, யவனர்கள் தமிழ் நாட்டிற்கு (கொங்கு நாடு) வந்து இந்த நீலக்கற்களை வாங்கிச் சென்றார்கள். உரோமாபுரிப் பெண்கள் இந்த நீலக்கற்களைப் பெரிதும் வாங்கிச் சென்றார்கள். யவனர்கள் இந்த நீலக்கல் பற்றியும், புன்னாட்டில் உள்ள சுரங்கம் பற்றியும் எழுதியுள்ளார்கள். பிளைனியும் இந்நீலக்கல் சுரங்கம் பற்றி எழுதியுள்ளார். புன்னாட்டை யவனர்கள் 'பவ்ன்னாட' என்று கூறினார்கள் புன்னாடு உள் நாடு என்றும் அங்கு நீலக்கல் கிடைத்தன என்றும் எழுதியுள்ளார்கள். மேலும், கொங்கு நாட்டில் படியூரிலும், (சேலம் மாவட்டம்) வாணியம்பாடியிலும் இக் கதிர் மணிகள் கிடைத்தன. இந்நீலக்கல்லை உரோமானியர்கள் மிகவும் விருப்பப்பட்டு வாங்கிச் சென்றார்கள். எனவே தான் கொங்கு நாட்டுப் பகுதியில் கள ஆய்வின் போது அல்லது அகழ்வாராய்ச்சியின் போது உரோமானியக் காசுகள் பெருமளவில் இன்றும் கிடைக்கின்றன.

புன்னாட்டில் நீலக்கல் சுரங்கத்தால் அதற்கு ஏற்பட்ட செல்வச் செழிப்பைக் கண்டு அழுக்காறுற்ற துளு நாட்டு மன்னன் நன்னன் புன்னாட்டைக் கைப்பற்ற அதன் மீது போர் தொடுத்தான். இதனை அறிந்த சேரவேந்தன், களங்காய்க் கண்ணி நார் முடிச் சேரல் ஆய் எயினன் தலைமையில் பெரும் படையை அனுப்பி புன்னாட்டை, நன்னன் கைப்பற்றாதபடித் தடுத்தான். இவ்வரலாற்று நிகழ்வை ஆசிரியர் பரணர் தனது அகப்பாடலில் அழகாக இணைத்துத் தருகிறார்!

*"பொலம் பூண் நன்னன் புன்னாடு கடிந்தென*
*யாழிசை மறுகிற் பாழி ஆங்கண்*
*அஞ்சல் என்ற ஆஅய் எயினன்*
*இகலடு கற்பின் மிஞலியொடு தாக்கித்*
*தன்னுயிர் கொடுத்தனன்."* (அகம். 396 : 2 - 6)

'முழங்கு கடல் முழவின் முசிறி' என்றும், வளங்கெழுமுசிறி என்றும், 'முதுநீர் முன்றுறை முசிறி' என்றும் பலவாறு சங்கச் சான்றோர்களாலும், பிளைனி போன்ற வரலாற்றுப் பேராசிரியர்களாலும், பெரிப்புளுசு நூலும், பிற நூல்களும் போற்றிய முசிறியின் முடிவு பற்றிக் கூறவேண்டிய 'கடைசிக் கட்டத்தில்' உள்ளோம். ஆம்..... ஆயிரக் கணக்கான ஆண்டுகளாகத் தமிழ் நாட்டையே வளப்படுத்திய 'வளங்கெழு முசிறி' கி.பி. 14 ஆம் நூற்றாண்டின் இடையில் ஏற்பட்ட வெள்ளப் பெருக்கினால் முற்றிலும் அழிந்து விட்டது. கி. பி. 1341இல் பெய்த பெருமழையின் காரணமாகப் பேரியாற்றில் வெள்ளப் பெருக்கு ஏற்பட்டு, முசிறி மூழ்கி மறைந்து போயிற்று. அதனால் அதை அடுத்துப் புதிய காயல்களும், துருத்திகளும் (மணல்மேடு) ஏற்பட்டன. வெள்ளப்பெருக்கில் முழுகிப் போன முசிறிக்கு அருகில், பிற்காலத்தில் 'கொச்சித்துறைமுகம்' ஏற்பட்டது.

## முசிறித் தொன்மைத் திட்டம் (Muciri Heritage Project)

கேரள மாநில அரசின் அகழ்வாய்வுத்துறை, இந்திய அரசின் தொல்லியல் துறையின் அனுமதி பெற்று, "முசிறித் தொன்மைத் திட்டம்" என்ற அமைப்பின் கீழ் கடந்த பல ஆண்டுகளாக, மறைந்து போன முசிறித்துறை முகப்பட்டினம் எங்கு இருந்தது என்பதைக் கண்டறியப் பல இடங்களில் கள ஆய்வுகள் மேற்கொண்டது. திருவஞ்சைக்குளம், கொடுங்கல்லூர் போன்ற இடங்களில் மேற்கொண்ட ஆய்வுகள் எவ்விதப் பலனையும் அளிக்கவில்லை.

ஆனால் கடந்த 2005 ஆம் ஆண்டு இன்றைய கொச்சிக்கு அருகிலுள்ள 'பட்டனம்' என்ற இடத்தில் கள ஆய்வு மேற் கொண்ட பொழுது வியக்கத்தக்க சான்றுகள் கிடைத்தன. அங்குத் தொடர்ந்து இந்த ஆய்வுகள் நடைபெற்று வருகின்றது. இத்திட்டத்திற்கு "முசிறித் தொன்மைத்திட்டம்" (Muciri Heritage projector)என்று பெயரிடப்பட்டு மிகச் சிறப்பாக அகழ்வாராய்ச்சிகள் நடைபெற்று வருகின்றன. இது வரை நடைபெற்ற அகழ்வாய்வின் பயனாகப் பண்டைக்காலத்தில் பயன்படுத்திய சிறிய தோணி ஒன்றும், இரண்டு செ.மீ. விட்டமுள்ள விலை உயர்ந்த கோமேதகக் கல் ஒன்றும் கிடைத்துள்ளது. அதில் மிக அழகிய வேலைப்பாடுடன் கூடிய சிங்கத்தின் உருவம் உள்ளது. இது மோதிரத்திலோ அல்லது பதக்கத்திலோ இருந்திருக்கலாம்.

உரோமானிய மதுக்கலயம், முற்கால சேரவேந்தர்களின் காசுகள், நீலக்கல் பொருத்தப்பட்ட மட்பாண்டச் சில்லுகள், தமிழ் - பிராமி எழுத்துகள் பொறிக்கப்பட்ட மட்பாண்டச் சில்லுகள், மணிகள் (beads) ஒப்பனைப் பொருட்கள் போன்ற பல்வேறு கலைத்திறன் மிக்க பொருட்கள் இந்த ஆய்வுகளிலிருந்து கிடைத்துள்ளதால், உலகின் பல்வேறு பகுதிகளிலிருந்தும் ஆராய்ச்சியாளர்கள், இப்பட்டினத்திற்கு வந்த வண்ணமுள்ளனர். அண்மைக்ககாலத்தில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வில் 'அமண' என தமிழ் பிராமி எழுத்து பொறிக்கப்பட்ட மண்பானையின் விளிம்பு ஒன்று கிடைத்துள்ளது. இதன் மூலம் இப்பகுதியில் சங்ககாலத்தில் சமணர்கள் (அமணர் - சமணர்) குடியிருந்தனர் என்பது தெரிய வருகின்றது. ஏற்கனவே, இரண்டு தமிழ் பிராமி எழுத்துகள் பொறிக்கப்பட்ட மண்பாண்டச் சில்லுகள் கிடைத்துள்ளன. இது மூன்றாவது ஆகும்.

இந்த ஆண்டு மதுரைக்கு அருகிலுள்ள அழகிய மலைசார்ந்த சிற்றூர் 'முத்துப்பட்டி' யிலுள்ள மலைக்குகையிலும், அதைச் சுற்றியிலுள்ள பாறைகளிலும் ஆராய்ச்சி மேற்கொண்ட பொழுது, அங்கு சமணர்கள் வாழ்ந்ததைக் குறிக்கும் வகையில் சமணப்படுக்கை காணப்பட்டது. அந்தச்சமணப்படுக்கை பற்றியும், நமது ஆய்வுக்கட்டுரையின் பொருண்மையான 'முசிறி' பற்றியும் தமிழ் பிராமி எழுத்துகளில் பொறிக்கப்பட்டு இருந்தது. தமிழ் பிராமி எழுத்துகளில், 'நாக பெருதை முசிறிக்

கோடன் இளமகன்' எனப் பொறிக்கப்பட்டுள்ளது. இந்தச் சமணப்படுக்கை நாகப்பேருரைச் சேர்ந்த அந்தை என்பவராலும், முசிறிக் கோடைச் சேர்ந்த இளமகன் என்பவராலும் அன்பளிப்பாக வழங்கப்பட்டது. (முசிறிக்கோடு - முசிறிமலை) இவ்வெழுத்துக்களின் காலத்தை கி.மு. முதலாம் நூற்றாண்டு என்கிறார் திரு. ஐராவதம் மகாதேவன் அவர்கள்.

கி. பி. 2 ஆம் நூற்றாண்டில் சேரநாட்டையாண்ட சேரவேந்தரான பாஸ்கர ரவிவர்மன் என்பவரால் பொறிக்கப்பட்ட செப்புப்பட்டயத்தில் 'முசிறிக்கோடு' பற்றிக்குறிப்பிடப்பட்டுள்ளது. மதுரை மாவட்டத்தைச் சேர்ந்த முத்துப்பட்டியில் 'முசிறிக்கோடு' பற்றிக் குறிப்பிடும் தமிழ் - பிராமி எழுத்துகள் கி. மு. முதல் நூற்றாண்டு என்பதாலும், மேலைநாட்டு வரலாற்றாசிரியர் கூற்றுக்களாலும் கிறித்து தோன்றுவதற்கு முன்பே சிறப்பான தொடு துறை முகமாக 'முசிறி' திகழ்ந்திருக்கின்றது என்பதில் ஒரு ஐயமுமில்லை. மேலும், கி. பி. 10 ஆம் நூற்றாண்டுச் சேரவேந்தன் செப்புப்பட்டயம் மூலமாகவும் முசிறி சிறந்த துறை முகப்பட்டினமாக 10 ஆம் நூற்றாண்டு வரை திகழ்ந்தது என்பதும் மறுக்க முடியாதது.

தென்னிந்தியாவில் இது வரை நடைபெற்ற / நடைபெறும் அகழ்வாராய்ச்சிகளிலேயே மிகச் சிறப்பாக நடைபெறும் அகழ்வாராய்ச்சி முசிறித்துறைமுக - அகழ்வாராய்ச்சியே என்றும், உலகின் மிகச்சிறந்த வல்லுநர்களைக் கொண்டு நடைபெறும் ஆராய்ச்சி இது என்றும் உறுதிபடக் கூறுகின்றார் திரு. ஐராவதம் மகாதேவன் அவர்கள். எனவே, கேரள மாநில அரசின் முசிறித் தொன்மைத்திட்டம் மிகச் சிறப்பாக நிறைவேற்றப் படுவதுடன், பண்டைத் தமிழ் நாட்டின் நாகரிகம், கலை, செல்வநிலை, வாணிபம் போன்ற பல்வேறு செய்திகளைப் பற்றி நாம் மேலும் அறிந்து கொள்ள உதவும் என்பது உறுதி !

எனவே, அதுவரை, காத்திருப்போம் !

# தொல்காப்பியம் சுட்டும் மகளிர் வாழ்வியல்

க. முருகேசன்
தஞ்சாவூர்

*நெடியோன் குன்றமும் தொடியோள் பௌவமும்*
*தமிழ் வரம்பறுத்த தண்புனல்*
*நன்னாட்டு மாட மதுரை!*

என இளங்கோவடிகளால் போற்றப்படும் மதுரை மாநகர்க் கண் நம் முன்னோர் முதல், இடை, கடையென்னும் முச்சங்கங்கள் நிறுவித் தொன் மொழியாம் சீர்சால் தமிழ் மொழியை வளர்த்து வளப்படுத்தினர். அச்சங்கங்களுடன் இடைச்சங்க காலத்தே தொல்காப்பியரால் இயற்றப்பெற்ற முதல் இயல் நூல் தொல்காப்பியமாகும். செந்தமிழ் மொழின் இலக்கண வளத்துக்கு முன்னோடி சான்றாகத் திகழ்வது தொல்காப்பியம். அத்தகைய தொல்காப்பியத்தில் மகளிரின் வாழ்வியல் நிலை எவ்வாறு அமைந்துள்ளது என்பதை விளக்குவதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

## கற்புமணம்

கற்பொழுக்கத்தில் பெண்ணைக் கொடுப்பதற்குரிய மரபினை உடையவர்கள் கொடுக்க, வதுவைச் சடங்குகளுடன் ஆண் மகன் கொள்வது கற்பு மணமாகும். இதனைக்,

*கற்பு எனப்படுவது கரணமொடு புணரக்*
*கொளற்குரி மரபின் கிழவன் கிழத்தியைக்*
*கொடைக்குரி மரபினோர் கொடுப்பக் கொள்வதுவே*

என தொல்காப்பியர் கற்பியலின் முதல் நூற்பாவில் எடுத்துரைக்கிறார்.

கொடுப்போரின்றியும், களவொழுக்கத்தில் இணைந்து உடன்போகிய காலத்தும் மணம் உண்டு. கற்பு மணத்தில் மூவேந்தர்களுக்கும் உரிய வதுவைச் சடங்குகள் பின்பு மக்களுக்கும் ஆயிற்று. இதனை.

*மேலோர் மூவர்க்கும் புணர்ந்த கரணம்*
*கீழோர்க் காகிய காலமும் உண்டே*

என வரையறுக்கிறார்.

## கரணம் தோன்றக் காரணம்

பண்டைய தமிழ் மக்களிடம் பொய்கூறல், பிழைபட நடத்தல் போன்ற தீயொழுக்கங்கள் தோன்றிய பின்னர் தலைமையானோர் வதுவையை ஏற்படுத்தினார். இதனைத் தொல்காப்பியர்,

*பொய்யும் வழுவும் தோன்றிய பின்னர்*
*ஐயர் யாத்தனர் கரணம் என்ப*

என வரையறுக்கிறார்.

பெண்களுக்கு நல்ல உரிமைப்பேறு இருந்தது. ஆகவே, விருப்பத்திற்கேற்ற காதல் திருமணம் நிறைந்திருந்தது. தந்தை, தமையன் போன்றோர் குறிப்பால் தலைவியின் ஒழுகலாறுகளை உணர்வர் என்ற கருத்தை,

*தந்தையுந் தன்னையும் முன்னத்தின் உணர்ப*

என்கிறார். எனினும் அவர்கள் எந்நேரமும் வேந்தன் விளைவுக்கு உட்பட்டவர்கள். தாயார், வளர்ப்புத் தாயார், தோழி, தலைவன் அவனது பாங்கன் போன்றோரின் கூற்றே ஒழுகலாற்றில் பேசப்படுகிறது. தந்தையின் குறுக்கீடு எங்கும் இருந்ததாகத் தெரியவில்லை. தலைவன், தலைவி இவர்களின் மனவோட்டங்களையும், உரிய கடமைகளையும், முறையான சமுதாயப் பாதையில் நெறிகளையெல்லாம் தொல்காப்பியம் தெரிவிக்கிறது.

## தலைமகளுக்குரிய இலக்கணம்

ஆடவர்க்குப் பெருமையும், வலிமையும் இயல்பு என்பது போல் பெண்டிர்க்கு அச்சம், நாணம், மடம் என்னும் பண்புகள் எக்காலத்தும் உரியவை என்றும்,

*அச்சமும் நாணும் மடனும் முந்துறுதல்*
*நிச்சமும் பெண்பாற் குரிய என்ப*

என இலக்கணப் பகர்கிறார். எனினும் பெண்டிர் விஞ்சிய செயல்பாடுகள் திரும்பவும் நிகழா வண்ணம் இரு கட்டுப்பாட்டுச் சட்டங்கள் உள்ளன. அவை பின்வருமாறு விளக்கப் பெறுகிறது.

## 1. முந்நீர் வழக்கம்

தொல்காப்பியம் தோன்றியபோதே, கி.மு. 1460க்கு முன்னரே மூன்று திசைக் கடல்களிலும் வேற்று நாடுகளில் நெல் வாணிபம் செய்தல், கடல் சென்று மீன் பிடித்தல் போன்ற செயல்கள் பெண்கள் பால் கிடையாது. இதனை,

*முந்நீர் வழக்கம் மகடூஉ வோடு இல்லை*

எனக் கூறி ஈண்டு அதிகரிக்கப்பட்ட பிரிவு காலிற் பிரிவும், கலத்திற் பிரிவும் என இருவகைப்படும்; அவற்றுள் கலத்திற் பிரிவு தலைமகளுடன் இல்லை என வரையறுக்கிறார். மேலும்,

***கடல் வாணிபப் பயணத்தின் போது யவனர்கள் தங்கள் நாட்டுப் பெண்டிர்களை உடன் கொணர்ந்து தமிழ் வேந்தர்க்குப் பரிசில் பொருள்போல் பாவித்தளித்து, அப்பெண்கள் வேந்தர்க்குப் பாதுகாவல் பணியிலமர்த்தியிருந்தமையைச் சங்க இலக்கியங்கள் கூறும்.***

கொன்றைத் துறை வந்த யவன வணிகர்களை, பசுமை நிறைந்த நமது குடியினர் வாழும் ஆங்குத் தங்க வைக்காது அடுத்து ஒரு காதம் வடக்கே மணல் தேரியாயிருந்த தூது குடியில் அமர்த்தி மதுரை வரை சென்று வாணிபம் செய்ய ஏதுவாய், அங்கிருந்து நேர் வழித்தடம் அமையப் பெற்றுள்ளதை உணர்கிறோம். (தாலமியின் குறிப்பு)

## 2. மடலேறுதல்

*எத்திணை மருங்கினும் மகடூஉ மடல்மேல்*
*பொற்புடை நெறிமை இன்மையான*

எவ்வகை நிலத்திலும் பெண்டிர் "பனை, தெங்கு, ஈந்து, கமுகு, தாழை" போன்ற கிளைகள் பாவாத புல்வகை மரங்களின் மடலில் ஏறிப் பணிகள் ஏதும் செய்வதில்லை; பெண்கள் வெளிப்பட மடல் ஏறுதல் சிறப்புடைய ஒழுக்கமாக இல்லாததை இந்நூற்பா நன்கு உணர்த்துகிறது.

மடலேறும் தொழில் ஒரு பெரிய, அவசியமான தொழிலாக அக்காலத்தில் அமைந்தமையால் இந்நடைமுறையை விரித்து எழுதப்பட்டிருக்க வேண்டும்.

பனையோலை இலக்கு கொண்டு இலக்கிய வளர்ச்சிக்கே ஆதாரம் பெறுவது போல, இம்மரங்களைப் பேணுவதிலிருந்து மிக அவசியப் பொருள்களைப் பெறலாம். நன்செய் விவசாயத் தொழிலுக்கு அடுத்து இதன் பயன்பாடு உள்ளதெனலாம். மேலும்,

சங்க இலக்கியங்களில் பல இடங்களில் விருந்து படைக்கும் போது, உணவு உண்டபின் கள் அருந்துவது தெரிவிக்கப்பட்டுள்ளது. மேலும், மக்கள் மத்தியில் இவ்விதப் பழக்கவழக்கங்கள் அத்தொன்மைக் காலத்தில் மடல் ஏறும் தொழிலின் விளைவாகவே அமைந்திருந்தது.

## கற்பு நெறி

***உயிரினும் சிறந்தன்று நாணே, நாணினும்***
***செயிர்தீர் காட்சிக் கற்புச் சிறந்தன்று எனத்***
***தொல்லோர் கிளவி......***

எனப் பெண்களுக்குக் கற்பு மிகச் சிறந்தது, "தொல்லோர் கிளவி" என்பதன் மூலம் தொல்காப்பியத்திற்கும் தொன்மையாக அது கடைபிடிக்கப்பட்டு வருகிறது. இது அடிமைநிலை காட்டுதவன்று, பெண்கள் கற்பு கடைப்பிடிக்காது போனால், தலைவனோடு சேர்ந்து அமைந்த பாங்கான குடும்பம் உருவாக வழியில்லாது அமையும் என்ற கருத்து வலியுறுத்தப்படுகிறது.

இதுகாறும் மேற்சுட்டிய தொல்காப்பியத்தின் வாயிலாக "தொல்காப்பியர் சுட்டும் மகளிர் வாழ்வியல்" என்ற தலைப்பினை இக்கட்டுரையில் பொறுப்புடைய பெண்களாக, புத்திசாலியாக பாரதி சொல்வதைப் போன்று மனதில் உறுதி இருந்திருந்தால் தான் அதன் விளைவாகத் தொடரும் செயலில் ஒரு நன்மை பிறக்கும் என்பதைத் தொல்காப்பியக் காலப் பெண்கள் நிறுவி உள்ளனர்.

# தமிழும் ஆங்கிலமும் : இலக்கண ஒப்புமை – ஒலிப்பு முரண் – ஒரு பார்வை

பேராசிரியர் வெ. பெருமாள்சாமி எம்.ஏ., பி.காம்.
சென்னை

எழுத்து, சொல், பொருள் என்று நமக்குக் கற்பிக்கப்பட்டிருந்தாலும், மொழியானது பொருள், சொல், எழுத்து என்ற வரிசையிலேயே உருவாகியிருக்கிறது. இருக்கிற பொருளைக் குறியிடுவதற்காகச் சொல் தோன்றி அந்தச் சொல்லின் ஒலி அலகுகளாக எழுத்துக்கள் பகுக்கப்பட்டுள்ளன எனலாம்.

## பொருள் முதல் வாதம்

முன்பே இயற்கையில் உள்ள பொருள்களேயன்றி, அண்மை நூற்றாண்டுகளில் அறிவியல் கொள்கைகளும், கண்டுபிடிப்புகளும் அறிவியலாளர்களால் உருவாக்கப்பட்ட பின்னர், அவற்றின் இயல்பு செயல்படு தன்மை முதலியவற்றை நோக்கி அவற்றுக்குப் பெயரிடப்பட்டுள்ளன. சான்றாக, நியூட்டனின் கண்டுபிடிப்புக்குப் பிறகு புவியீர்ப்பு விசை (Law of Gravitation) என்ற கொள்கையும் போன்ற மொழியாக்கங்களும் தோன்றின. எண்ணிறந்த கணக்கீடுகள், தொகுத்தல்கள் போன்றவற்றைப் பிழையின்றியும் மிக விரைந்தும் செய்ய வல்ல ஒரு பொருள் முதலில் உருவாக்கப்பட்டுப் பின்னர் அதன் பயன்பாடு, செயல்பாடு முதலியன கருதி கணினி (Computer) என்றும் சொற்கள் தோற்றுவிக்கப்பட்டன. அது தொடர்பான கலைச்சொற்கள் படைக்கப்பட்டதும் அங்ஙனமே.

எனவே தான் சொல்லுக்குப் பொருள் என்பதனை விட பொருளைக் குறிப்பதற்குத்தான் சொல் எனத் தொல்காப்பியர் வரையறுத்தார்.

*எல்லாச் சொல்லும் பொருள்குறித் தனவே* (தொல். சொல். 155)

இன்னும் அவர், 'ஆடூஉ அறிசொல்,' 'மகடூஉ அறிசொல்' எனவும் 'இயற்கைப் பொருளை இற்றெனக் கிளத்தல், செயற்கைப் பொருளை ஆக்கமொடு கூறல்' என்றெல்லாமும் இயல் எங்கும் பொருளை அறிதல், பொருளைக் கூறல், சுட்டுதல் என வலியுறுத்துவது இக்கருத்தையே.

## எழுத்தெனப் படுவது ஒலி

எழுத்துகள் என்பன ஒலிகளே. அவை உந்தி, தலை, மிடறு, நெஞ்சு என்னும் தோன்றுமிடங்கள், பல், இதழ், நா, மூக்கு, அண்ணம் உள்ளிட்ட பொருந்துமிடங்கள், ஒலிக்கப்படும் கால அளவு இவற்றின் அடிப்படையிலேயே உயிர் என்றும் மெய்யென்றும் வலி, மெலி, குறில், நெடிலென்றும், பிறவாகவும் பெயரிடப்பட்டுள்ளன. எழுதப்படுகிற வரிவடிவம் பின்னர் அமைந்து காலப் போக்கில் மாற்றம் பெற்றுச் சீர்திருத்தம் எல்லாம் அடைந்து வருகிறது.

முன்பெல்லாம் ஒ-ட் = ஒட், ட = ஒட்ட, க = ஒட்டக, ம் = ஒட்டகம் என்று எழுத்தறிவித்துக் கூட்டிய வழி, சொல் உணர்த்தியமுறை இப்போது விடப்பட்டு விட்டது. பொருளைப் படமாகக் காட்டி அதற்குரிய சொல் கற்பித்தலே இன்றைய நடைமுறை. எழுதப்படுவதினும் சொல்லப்படுதல் அதாவது மொழியப்படுதல் முதன்மையானது என்பதாலேயே 'மொழி' என்கிற காரணப் பெயர் அமைந்துள்ளதையும் அறியலாம். ஆங்கிலத்திலும் மொழியை (நா) Tounge என வழங்கும் ஒப்புமை நோக்குதற்குரியது தாய்மொழி (Mother Tounge)

ஆங்கிலம் ஐரோப்பிய மொழி. தமிழ் திராவிட மொழி. எனினும் எங்கும் அவ்வம்மக்கள் எளிதாக வழங்குவதற்கு ஏற்ப இயல்பாக அமைந்து கொள்வது மொழியின் போக்கு ஆகும். நமக்கு உயிர் எழுத்துகள் பன்னிரண்டு. என்றாலும் நெடிலுயிர்கள் மாத்திரை அளவில் நீண்டு ஒலிக்கப்படுகின்றனவே அல்லாமல் அவை பிறப்பின் அடிப்படையில் வேறுபட்டவை அல்ல. அவை குறிலின் நீட்டம். அவ்வளவே. எனவே, அ இ உ எ ஒ என ஐந்துமே அடிப்படை உயிர்களாம். அ இ இரண்டன் கூட்டம் ஐ என்பதும், அ உ இரண்டன் சேர்க்கை ஔ என்பதும் ஆசிரியர் தொல்காப்பியரின் துணிபு. ஒலியியலாளரும் மறுப்பாரிலர்.

*அகர இகரம் ஐகாரம் ஆகும்*
*அகர உகரம் ஔகாரம் ஆகும்* (-தொல், எழுத். 54, 55)

ஆங்கிலத்திலும் a, e, i, o, u, என்ற ஐந்தும் உயிர் எழுத்துகள் (vowels) என வழங்கப்படும் ஒற்றுமையை ஈண்டு ஓர்ந்து மகிழ்வோம்.

## இரு மொழிகளிலும் எண்ணுப்பெயர் மாறும் தன்மை

ஒன்று இரண்டு என்னும் எண்ணுப் பெயர்கள் சொற்றொடர்களில் ஒரு இரு என ஆகின்றன. ஒரு இரு என்னும் இவை பிற சொற்களோடு சேரும் போது உயிர்மெய் எழுத்துகளை முதலாய்க் கொண்ட சொற்கள் வந்தால் ஒரு

இரு என்றே இயல்பாய் நின்று சேர்ந்து கொள்கின்றன.

(எ.டு) ஒரு + சொல் = ஒரு சொல், இரு + கரை = இருகரை.

*முதனிலை எண்ணின்முன் வல்லெழுத்து வரினும்*
*ஞநமத் தோன்றினும் யவவந் தியையினும்*
*முதனிலை இயற்கை என்மனார் புலவர்*

(– தொல். எழுத். 478)

எனத் தொல்காப்பியரே தமக்கு முந்தைய சான்றோர்களை மேற்கோள் காட்டுகிறார்.

ஆனால், உயிரை முதலெழுத்தாகக் கொண்ட சொற்கள் வருகையில் ஒரு இரு என இருப்பவை ஓர் ஈர் என முதல் நீண்டு உகரம் கெட்டு இணையும் என்பது நம் இலக்கண மரபு.

*முதலீ ரெண்ணின் முன் உயிர்வரு காலை*
*தவலென மொழிப உகரக் கிளவி*
*முதனிலை நீடல் ஆவயினான* – (தொல்.எழுத்.455)

(எ.டு.) ஒரு + ஆயிரம் = ஓராயிரம், இரு+உடல் = ஈருடல், ஒரு இரு என்பன உயிர்முதற் சொல் வந்தால் ஓர் ஈர் என மாறுவதைப் பார்த்தோம்.

ஆங்கில எண் வரிசையில் one (ஒன்று) என்றுள்ள எண்ணுப் பெயர் பெயரடையாக வருகையில் 'a' (ஒரு) என ஆகும்.

எ.டு. : a boy, a cat

அதுவே உயிரெழுத்தை முதலெழுத்தாகக் கொண்ட சொல் எதிர்வந்தால் an (ஓர்) என்று மாறி வழங்கப்படும்.

எ.டு. : an event, an ant

எழுத்துக்களைத் தனியாகவும் சொல்லில் அமையும் போதும் ஒலிப்பதில் ஆங்கிலத்திற்கும் தமிழுக்கும் வேறுபாடு உண்டு. தனியாக 'a' (ஏ) என ஒலிக்கப்படும் ஆங்கில எழுத்து at (அட்), car (கார்) are (ஆர்) ate (ஏட்) என்று ஒவ்வொரு சொல்லிலும் வெவ்வேறு ஒலியெழுத்தாக அதாவது முறையே அ, ஆ, ஏ என ஒலிக்கப்படுகிறது. இன்னும் 'u' என்னும் எழுத்து cut என்பதில் அகரமாகவும் put என்ற சொல்லில் உகரமாகவும் ஒலிக்கும் கூத்தை

என்னென்பது?

மாறி மாறி ஒலித்தாலும் அவை உயிரொலிகளாகவே அமைந்திருப்பதால் பெரிய குறையில்லை. ஆனால், உயிரெழுத்து மெய்யொலி எழுப்பினால் இடரல்லவா?

ஆங்கில நாடக ஆசிரியர் ஜார்ஜ் பெர்னாட்ஷா அம்மொழியில் இம்மாதிரி எழுதுவது ஒன்று ஒலிப்பது இன்னொன்றாக இருக்கிற தன்மையை நையாண்டி செய்துள்ளார். அவர் GHOTI என்று எழுதிக்காட்டி அதனை FISH எனப் படித்தார். எதிரே இருந்தவர்களுக்குத் திகைப்பு. அவர் விளக்கினார்.

'Laugh (லாஃப்), Cough (காஃப்) எனச் சொல்கிறீர்கள். எனவே 'gh' என்பதும் 'f' என்பதும் வேறல்ல. இன்னும் Women (விமன்) என்பதில் 'O'வை 'i' ஒலியில் தானே உச்சரிக்கிறீர்கள். அடுத்து nation ( நேஷன் ), motion (மோஷன்) என்பவற்றில் 'ti' ஐச் சொல்கையில் 'sh' (ஷ்) என்றே ஒலிக்கிறது. எனவே,

gh = f
o = i
ti = sh
Ghoti = Fish

எனப் படித்து ஆங்கிலத்திலுள்ள ஒலிமுரண்களைக் கோட்டி செய்தார்.

ஆனால் நம் தமிழ் எழுத்துகளில் இவை போலும் குறையொன்றும் இல்லை. அவை தனியாக ஒலிப்பது போன்றே சொற்களிலும் ஒலிக்கப்படுகின்றன. 'அ' எனத் தனி எழுத்தொலியாகச் சொல்வதைப் போலவே, 'அம்மா' என்னும் சொல்லிலுள்ள 'அ'வும் ஒலிக்கப்படுகிறது. சொல்லின் இடையிலும் இறுதியிலும் மெய்யை ஏற்று உயிர்மெய்யாக வரும் போதும் அதன் உயிரொலிப்பு மாறுபடுவதில்லை. மருதம், வாழ்க என்ற சொற்களில் த, க என அகர ஒலி சற்றும் மாற்றமின்றி ஒலிப்பதை நாம் அறிவோம்.

ஆங்கிலம் கூட வரிவடிவத்தைக் கணக்கில் கொள்ளாமல் ஒலிவடிவைக் கொண்டே தொடரிலக்கண அமைதி பெறுவது கருதத்தக்கது. தமிழில் உயிர் வரின் ஒரு --- ஓர் ஆவது போல் ஆங்கிலத்திலும் உயிர் முதல் வருமொழி ஏற்கும் போது 'a' என்பது 'an' என மாறும் என முன்னர்க் குறித்தோம். இத்தொடர்பில் அடுத்துள்ள சான்றுகளை ஆய்வோம்.

1. an Umbrella (அம்பரல்லா), an Uncle (அங்கிள்)
2. a University (யுனிவர்சிடி), a Unit (யூனிட்)
3. an MLA (எம்மெல்லே, Emmellae)

முதலிரண்டு சான்றுகளில் 'U' முதலெழுத்தாகக் கொண்ட நான்கு சொற்கள் உள்ளன. முதற்சான்று சொற்களில் an முன்னடையும், இரண்டாம் சான்று சொற்களின் முன் a என்னும் எண்ணுப் பெயரடையும் வந்துள்ள குழப்பத்தைக் காணலாம். காரணம் தேடுவோம்.

சான்று 1. U = உயிரெழுத்து (Vowel). அம்பரல்லா, அங்கிள் உயிரொலிகள். எனவே an umbrella, an uncle சரியாக வந்துள்ளன. உயிர் வந்ததால் a, an ஆயிற்று.

சான்று 2. U = Vowel தான். ஆனால் ஒலி உயிரொலி அல்ல. Yuniversity, Yunit என யகர மெய்யொலி. எனவே an என மாறாமல் வருமொழி மெய்முதல் வந்தால் a' ஏற்பது போல் a university, a unit என இயல்பான எண்ணுப் பெயரடையைப் பெற்று வந்துள்ளது.

மூன்றாவது சான்றில், உயிரெழுத்து முதலில் வராத நிலையில் எங்கிருந்து வந்தது? இதென்ன புதுக் குழப்பம்? அதையும் தீர்ப்போம்.

சான்று 3. M (எம்) = 'மெய்' தான் (Consonant). ஆனால் அது ஒரு சொல் முதலாக Man, Motor என வராமல், எழுத்தாகவே வந்து, சொல்லுகையில் 'Em' என உயிரொலியை முன்வைத்து எம்மெல்லே என்று உச்சரிக்கப்படுவதால், a man, a motor என்பன போல் 'a' பெறாமல் உயிரொலி வருவதை ஏற்பதற்காக an MLA என மாறி வருகிறது.

எனவே, வருமொழி முதலில் உயிரெழுத்தா மெய்யெழுத்தா என்பது அங்குள்ள வரி வடிவத்தைப் பொறுத்தது அல்ல - ஒலி வடிவத்தைக் குறித்ததே என்றும், எழுத்து என்பது ஒலியை முதன்மைப் படுத்தியதே என்றும் நினைவில் பதிவோம்.

## குறிலொற்று முன் உயிர்

இனி இன்னொன்று. மக்கள் வழங்கும் மொழியின் இயல்பைக் கூர்ந்து நோக்கியே நம் இலக்கண ஆசிரியர்கள் வரையறைகளை ஏற்படுத்தியுள்ளனர்.

*குறியதன் முன்னர்த் தன்னுரு பிரட்டலும்* (தொல். எழுத். 161)

என்று தொல்காப்பியரும்,

*தனிக்குறில் முன்ஒற்று உயிர்வரின் இரட்டும்* (நன்னூல். 205)

எனப் பவணந்தியாரும் புணர்ச்சி விதிகள் வகுத்திருப்பது நமக்கு மட்டுமல்ல பிற மொழி வழங்குவார்க்கும் பொருந்தும்.

எ.டு. மின் + அஞ்சல் = மின்னஞ்சல்

எள் + உருண்டை = எள்ளுருண்டை

ஆங்கிலத்தில் Win (வின்) என்பது குறிலை ஒட்டி மெய் வரும் சொல். இதனோடு 'er' என்கிற உயிர்முதல் விகுதி இணையும் போது 'n' மெய் இரட்டித்து Winner (வின்னர்) என்கிற கூட்டுச்சொல் உருவாவதைக் காணலாம். அதே போல் 'ing' எனும் உயிர்முதல் பின்னொட்டு சேர்கையில் cut+ing = cutting என இரட்டிப்பதையும் காண்க.

ஆனால், நெடில் முன் வரும் ஒற்றோ, ஒன்றுக்கு மேற்பட்ட எழுத்துகளை அடுத்த மெய்யோ அப்படி இரட்டிப்பதில்லை.

எ.டு. : தேன் + அருவி = தேனருவி, மக்கள் + ஆட்சி = மக்களாட்சி

Read+er = Reader, Sail + ing = Sailing

## முடிப்பு

இதுகாறும், முதலில் பொருள் - பின்னர் அப்பொருளைச் சுட்டவும் வழங்கவும் சொல் - அச்சொல்லின் உறுப்பலகுகளாக எழுத்து என்னும் முறைமையையும், எழுத்தெனப்படுவது அவற்றின் பிறப்பினடிப்படையில் ஒலியெழுத்தே என்பதையும், தமிழ் ஆங்கிலம் இரண்டுக்கும் இடையே இலக்கண அமைவுகளிலுள்ள ஒப்புமையையும் சான்றுகளுடன் பார்த்தோம். ஆங்கிலத்தில் எழுத்தினை ஒலிப்பது இடத்துக்கு இடம் வேறு வேறாக உள்ளது போலல்லாமல் நம் மொழியில் தனி எழுத்தும் சொல்லெழுத்தும் ஒன்றாய் அமைந்துள்ள சீர்மையையும் கவனப்படுத்திக் கொண்டோம். இரண்டும் கைகோத்துக் கொள்கிற நெருக்கத்தில் சிற்சில இசைவு காணப்பட்டாலும், தடுமாறாத ஆற்றொழுக்கு நடையின் தெளிவால் தமிழின் தனித்துவம் பளிச்சென உயர்ந்து தெரிவது நமக்குப் பெருமையே.

# திருப்பட்டீச்சரம் திருப்பதிகத்தில் மழபாடி வருவது ஏன்?

தலைமயாதீனப்புலவர்
தா. குருசாமி தேசிகர்

திருஞானசம்பந்தர் 'முத்துப்பந்தர்' பெற்று இறைவனின் திருவருளைப் போற்றிப் பாடிய தலம் திருபட்டீச்சரமாகும். இத்தலத்துப் பதிகத்தில் 'பழைசையள் மாட மழபாடியுறை பட்டிசரம்' என்றும் 'பழையாறை மழபாடியழகாயமலி சீர்ப்பட்டிசரம்' என்றும் 'மழபாடி மலிபட்டிசரமே மருவுவார்' என்றும் 'மழபாடி நகர் நீடு பாழயாறு அதனுள் பட்டிசரம்' என்றும் 'மந்தமலி சோலைமழபாடி நகர் நீடு பழையாறை' என்றும் ஐந்து பாடல்களில் அருளிச்செல்வன்.

## குறிப்புரைச் செய்திகள்

காமதேனுவின் புத்திரிகள் நால்வருள் பட்டி என்பவர் பூசித்தமையாய் பட்டிசரம் என ஆயிற்று என்றும், பழைசை - பழையாறை என்பதன் மரூஉ என்றும், மழபாடி - நகரின் பெயர் என்றும் 'திருமழபாடி' என்பது வேறு என்றும், பட்டிசரம் - கோயிலின் பெயர் என்றும் பனசைத் தேவாரப் பதிப்பில் தி. பட்டுசாமி ஓதுவார் விளக்கம் அளிப்பார். அவர் வணக்கத்திற்குரியவர்.

## பழையாறை

சங்க காலச் சோழர்கட்கு உறையூரும், புகார் நகரும் தலைநகரம் என்றும், பிற்காலச் சோழர்கட்குத் தலைநகர் பழையாறை, தஞ்சை, கங்கை கொண்ட சோழபுரம் என்றும் வரலாறு வரையறுக்கும். இவற்றுள் 'பழையாறை – மாநகர்'– சம்பந்தர் அப்பர் காலத்துச் சோழர் தலைநகரமாயிருந்தது.

சோழர்கள் பல்லவர்க்குக் கீழ்ச்சிற்ற நகராய் இருந்து, வாழ்ந்த இடம் பழையாறை மாநகராகும். இன்னும் இச்சோழர்களில் சிலர் மான உறவாய் கொடும் கொடும்பாளுரிலும், மழயர் நாட்டிலும் தங்கி இருந்ததாகவும் கூறுவர். மங்கையர்க்கரசியம்மை தந்தை மணிமுடிச் சோழன் என்பவன்,

பழையாறையில் வாழ்ந்ததும், அம்மங்கையர்க்கரசியின் தாய் மழவர் நாட்டு மங்கை என்றும், மழநாட்டு மன்னர் சேலம் மாவட்டம், கொல்லிமலை உள்ளிட்ட நாட்டுக்குரிய சிற்றரசர் என்பதும் 'கொல்லிமழவன்' வரலாற்றால் தெரிய வரும்.

## அறியவேண்டியவை

சங்க காலத்திலேயே, கொடும்பாளூர் இருங்கோவேளிடம் கரிகாலன் சம்பந்தம் வைத்தது போல மழ நாட்டிலும் 'சம்பந்தம்' வைத்திருந்த சோழ மரபினர் – வரலாறு இருண்ட காலத்தால் தெரியவில்லை. பிற்காலச் சோழரில் பலரும் மழவர் நாட்டுச் சம்பந்தம், ஆதித்த சோழன் முதற்பராந்தகன், சுந்தரசோழன், உத்தமசோழன் கண்டராகித்தர் முதலியவர் பெற்றுள்ளதைக் கல்வெட்டு கொண்டு வரலாற்றாசிரியர் வரையறுத்துள்ளனர். வந்தியத் தேவன் மழவர் குலத்து மாணிக்கமாகும். இராசராசன் தன் மகள் குந்தவையை அவர்க்கு மானம் செய்து வரவு கொண்ட செய்தி அனைவரும் அறிந்தது.

## திருமழபாடி

திருமழபாடி, மேலைபழுவூர், கீழைப்பழுவூர் மழவர்கள் வாழ்ந்த இடமாகும். மழபாடியும், பழுவூரும் தேவாரப் பாடல் பெற்றத் தலங்கள் ஆகும். 'செம்பியன் மாதேவி' கண்டாதித்தர் மனைவியாவார். இவர்களுக்கு முன்பு சம்பந்தம் பெற்ற மழவர் இனத்தவர், வாழ்ந்த பழையறை பகுதியின் மேற்பகுதி 'மழபாடி' என்றாயிற்று. பேரரசர், சம்பந்தம் பெற்ற மழவர்கள் தங்கள் தனித்தன்மையை நிலைநாட்டி வளமனை அமைத்து வாழ்ந்த பகுதியே சம்பந்தால் 'மழபாடி' என்று சுட்டிக்காட்டி, அம்மழபாடி பழையாறை யாகிய சோழரின் தலைநகரின் அண்மையில் விளங்கியதால் அதனைச் சம்பந்தர், பழைசையுள் மழபாடி என்று திருமழபாடிக்கு வேறானது என்று பிரித்துக் காட்டுவார்.

## பட்டிசரம்

'பட்டிசரம்' பாடல் பெற்ற தலமாக வேண்டுமானால், அதற்கு முன்பே அங்கு சிவாலயம் இருந்திருக்க வேண்டும். அதுபோலவே பழையாறும் நாவரசால் பாடல் பெற்றது. பட்டிசரம் கோயிலில் அப்பர், சம்பந்தர், புடைப்புச் சிற்பம் திருமதியில் உள்ளதால் சுந்தரர் காலத்துக்கு முன்பே சோழர் திருப்பணி

செய்திருக்க வேண்டும். சோழர்கள் பல்லவர்கட்கு அடங்கி இருந்து விசயாலய சோழன் காலத்தில் சோழப் பேரரசு உதயமாக விளங்கியதற்குப் பட்டீசரம் ( துர்க்கை ) கொற்றவையின் பேரருளே காரணம் என்பர். இக்கொற்றவையைப் பிற்காலத்தில் அமைத்தவர் மழவராயர் என்பர். சோழர் எழுச்சி பெற இத்துர்க்கை பிரசித்தி பெற்றது.

## நிறைவுரை

சோழப் பேரரசின் மான உறவும், ராஜ விசுவாசமும் கொண்ட மழவர்கள், பழையாறையின் ஒரு பகுதியில் வாழ்ந்த நகரே, சம்பந்தரால் பழையாறையும் மழபாடியும், அங்கே கோயில் கொண்டுள்ள பட்டீசரமும் ஒருங்கே இணைந்து வரலாற்றுணர்வு ததும்ப பதிகம் பாடியுள்ளார் என்று கருதி மகிழலாம். இது ஒரு கருதவாயவாகும்.

பல்லவர் திருப்பணிப் பாணியும் உள்ளது.

# இளவேனில்

புலவர் சி. பாண்டுரங்கன், ஆம்பூர்

பங்குனி வென்ற சித்திரைகொள்
பரிசே, "வசந்தம்" : "இளவேனில்"
தங்கும் மலைமுகில் மின்னலொடு,
தடஒலி - ஒளிவழி கைகுலுக்கி,
முதல்மழை பிறந்தது பயிர்நோக்கி !
முந்திவீழ் இலை,வேர்க் குநன்றிசொல்ல,
முதல்துளிர் பிறந்தது மரக்கொம்பில் !
முதல்நாள் கதிர்புவி கண்ணோக்கில்...... ( 1 )

முன்னுரை பிறந்தது : "இளவேனில் !"
முன்வரும் அனல்தணி கருணையால்,
விண்தோய் பனை-வளி நலம்கேட்க,
விரைவாய்ப் பிறந்தது பனைநுங்கே !
கண்மாய் நீர்வளம் காற்றணைக்கக்
கனிவாய்( ப் ) பிறந்தது : 'இளந்தென்றல் !'
நன்னகர் சிற்றூர் மணம்பரப்பி,
நகைமுக மல்லிகை பிறந்ததெங்கும் ! ( 2 )

வெம்மை தணிக்கப் புவித்தாயும்
விரைந்து வைத்த பணிக்கூழ்போல்,
வெம்மை தணிதர் பூசனியும்
வேண்டிய மட்டும் விளைந்ததெங்கும் !
தென்னை, சென்னை மதுரைபோல்
தமிழக நகர்க்கிள நீர்குவிக்கும் !
நன்மை நாடுவோர் நடைவழிசார்
நன்னீர் - மோர்ப்பந் தல்வைத்தார் ! ( 3 )

பிறப்பெல்லாம் பிறர்க்கெலாம் உதவுவதற்கே !
பிறந்தபின் வாழ்க்கை இனிப்பதற்கே !
அறவே வெம்மை தணிமழைபோல்,
அனைவரும் பிறர்நலம் நாடிவிட்டால்,
குறைவிலை, துயரிலை, வெறுப்பிலையே !
கூடிடும் நலமெலாம் கோபுரம்போல் !
மறைஎனும் குறள்நெறி மாண்புஉள்ளம்,
மாநிலத் தோரே பெற்றுயர்வோம் ! ( 4 )

# நால்வர் பெற்ற அருள்

முனைவர் சுப. அண்ணாமலை
மதுரை

சைவ மரபில் நால்வர் என்பது தேவாரம் பாடிய திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசர், சுந்தரமூர்த்தி ஆகிய மூவரையும் திருவாசகம் பாடிய மாணிக்கவாசகரையும் குறிக்கும். இம்மரபு பற்றியே சிவப்பிரகாசம், இந்நால்வரைக் குறித்து 'நால்வர் நான்மணி மாலை' பாடினார். இவ் அருளாளர் பெற்ற இறையருளின் தன்மை பற்றி ஆய்வது இக்கட்டுரை.

அருள் பெற்றதைக் காட்டும் வகையில், இந்நால்வர்க்கும் முறையே ஆட்கொண்ட பிள்ளை, ஆட்கொண்ட அரசு, ஆட்கொண்ட நம்பி, ஆட்கொண்ட அடிகள் எனப் பெயர் வழங்கும். இவற்றில் ஆட்கொண்ட என்பதை, ஆளுடைய என்றும் வழங்குவர்.

சைவ நாயன்மார் அறுபத்து மூவருள், இந்நால்வரே, இறையருள் முதற்கண் பெற்றுத் தமது வாழ்க்கையைச் சிவநெறியில் செலுத்தியோர். பிறர் தம் வாழ்வின் பயனாக அருள் பெற்றோர் ஆதலால், இந்நால்வரும், அருள் பெற்றோர் என்னும் கருத்தமைய அருளாளர் எனப்பட்டனர்.

இப்பெரியோர் இறைவனால் வலிய ஆட்கொள்ளப் பெற்றனர். இதனை இறைவன் செயலாக வைத்து, முறையே, பாலைக் காட்டி ஆட்கொள்ளப் பெற்றார். சூலை காட்டி ஆட்கொள்ளப் பெற்றார். ஓலை காட்டி ஆட்கொள்ளப் பட்டார். காலைக்காட்டி ஆட்கொள்ளப்பட்டார் என நயம்படக் கூறுவர்.

திருஞானசம்பந்தர் இறைவியிடம் பால் பெற்று உண்டார். அந்நிலையில் அருளைப் பெற்றார். அருளே ஞானம், ஆதலின் ஞானசம்பந்தர் எனச் சிறப்புப் பெற்றார்.

அருள் பெறுவதற்கு ஒரு தலைக்கீடு வேண்டும். பெற்ற தாயை விட்டுத் தந்தையுடன் சீகாழிக் கோயிற் குளக்கரைக்கு வந்தவர். அத் தந்தையும் நீரில் மூழ்கி ஆடியமையால், அவரையும் காணாமல், அந்நேரம் பசி வந்திட, பெற்றோரை நினைந்து அழாமல், முற்பிறவி வாசனையால், உலகின் அம்மையப்பரை நினைத்து கைம் மலரால் கண்மலர் பிசைந்து கமுதார்.

எனவே அவர் பசி உடற்பசி அல்ல. உள்ளத்தின் அருட்பசி. அதனை நீக்க உரியோர் சிவபெருமானும் உமையம்மையுமே ஆதலின் அவர்கள் இடப ஊர்தியில் வந்து தோன்றினர். அம்மை, நனை, ஞானப் பாலாக பொற்கிண்ணத்தில் அளித்தார்.

இதனை ஞானசம்பந்தர், போதையார் பொற்கிண்ணத்து அடிசில், பொல்லாது எனத் தாதையார் முனிவுறத் தான் எனை ஆண்டவன் என்று கூறுகிறார்.

பாலை அளித்தோர் யார் எனத் தந்தை வினை, பீடு உடைய பிரமாபுரம் மேவிய பெம்மான் இவன் அன்றே எனச் சுட்டிக் காட்டினார்.

வேதமும் பிறரும் இன்னது எனக் கூற இயலாத பரம் பொருளை, 'இவன்' எனச் சுட்டியது, இவரது ஞானம் சுட்டியது மட்டுமோ? அந்நிலையில் அபர ஞானமும் அதன்மேல், பரஞானமும் பெற்றார்.

இதைச் சேக்கிழார்,

*சிவனடியே சிந்திக்கும் திருப்பெருகு சிவஞானம்*
*பவமதனை அற மாற்றும் பாங்கினில் ஓங்கிய ஞானம்*

எனப் பொது வகையால் கூறிய பின்,

*உவமையிலாக் கலை ஞானம்*
*உணர்வறிய மெய்ஞ் ஞானம்*

எனச் சிறப்பு வகையால் கூறினார்.

பொது வகையால் கூறியது அபரஞானம். மற்றது பரஞானம். இவற்றில், 'சிவனடி' என்பது பெருமானது உருவத்திருமேனி. சிவன், அப்பன், அடி, அம்மை முதல் திருப்பதிகத்தில் தோடுடைய செவியன் என

அம்மையப்பராகக் கண்ட உருவந் திருமேனியைப் பாடிய அவர் நம் பதிகங்கள் அனைத்திலும் இந்த உருவந் திருமேனியைப் பாடினார். சான்றாக,

1. வில்லை அன்ன வாணுதல்
வெள்வனை ஓர் பாகமாம்
நெ லீலை வெள்ளை ஏற்றினான்
கோடிகாணா சேர்மினே (திருக்கோடிகா)

2. வேலின் நேர்தரு கண்ணினாள்
உமை பங்கன் அங்கணன்
மிழலை மாநகர்
ஆல நீழலின் மேவினான்
அடிக்கு அன்பர் துன்பிலரே (திருவீழி மிழலை)

3. அரும்பும் தரும்பையும் மென் கொங்கை
கரம்பின் மொழியா னோடு உடன்கை அலைவீசி
4. நாதார் கொன்றை தயங்கு முடியர் முயங்கு மடவாளை
போதார் பாகமாக வைத்த புனிதர் (திருக்கயிலாயம்)

என்பவற்றைக் காணலாம். அவர் பதிகங்கள் முழுவதிலும் சிவபெருமானின் உருவத்திருமேனி அழகையும், நணம் செயல்களையும் பாடுகின்றார்.

இவை, அவர் மனதில் கண்ணால் கண்ட உருவங்கள். ஆதலால், அவரும் பெருமானின் உருவ, அருவ, சொரூபங்களுள் அநலமும் சொரூபமும் பரம் அவநம் முதல் நிலைபரம் மேல் நிலை.

சேக்கிழார் பாடலில் முதல் இரண்டு அடிகளை மேலே காட்டினேன். இதுகாறும் அவற்றுள் முதலடியை விளக்கினேன். இவை, இரண்டாவது அடி. பரம் என்பதை விளக்குவது பரம் நேரிடையாகக் கூற இயலாதது. அதன் பயனைக் கூறி விளக்குகிறார். இறைவனின் பரநிலைக் காட்சி (காட்சி என்பது ஞானம் - அறிவு - மெய் உணர்வு) பிறப்பை, மேலும் நிகழாதவாறு அறவே மாற்றும் இது வீடு பேறு. ஓங்கிய என்னும் அடை மொழியினால் மேலான ஞானம் என்பதை உணர்த்தும். ஆக, இந்த இரண்டு அடிகளும், வீடு பேற்றைக் காரண வகையால் உணர்த்தியமையால் அபர ஞானம்.

இனி, பின் இரண்டு அடிகளை நோக்குவோம். அவற்றுள் முதலடி

*உவமை இலாக் கலை ஞானம்*
*உணர்வு அறிய மெய்ஞ்ஞானம்*

என்பது. இதனுள், கலைஞானம் என்பது அபர ஞானம். மற்றது, பர ஞானம்.

ஓதி உணரப்படுபவற்றுள் தனக்கு இணை இல்லாதது ஆகமம். வேதம் பொது நூல். ஆகமம் சிறப்பு நூல். கலை நூல்களுக்கு எல்லாம் அடிப்படை இவை இரண்டுமே. இவற்றுள் வேதம் மந்திரங்களாலும், உபநிடதங்களாலும் இறைவனைப் பாடுவது. ஆகமம் உருவந்திருமேனியான சிவலிங்கப் பெருமானையே பரம்பொருளாகக் கொண்டு அவனைக் கிரியைகளால் வழிபடுவதையும் அவற்றால் பெறும் பக்தி ஞானத்தையும் கூறுவதால் சிறப்பு நூல்.

வேதம், ஆகமம் இரண்டையும் ஓதி உணரலாம். ஆதலின் அபர ஞானம், பரஞானமோ, உணர இயலாதது. இறைவன் உணர்த்த வேண்டியது. அதுவே மெய்ஞானம்.

இதுவரை கூறிய இரண்டுவகை ஞானத்தையும் திருஞான சம்பந்தர் பெற்றமையைச் சேக்கிழார் கூறி, அவரது பெயர்க் காரணத்தை,

*தவ முதல்வர் சம்பந்தர் தாம்*
*உணர்ந்தார் அந்நிலையில்*

என்று கூறிய பாடலை நிறைவு செய்கின்றார்.

இதுகாணும் கூறியவற்றால், ஞானசம்பந்தர் இறைவனை ஞானமாகவே பெற்றார். வரம் ஞானத்தை ஒரே சமயத்தில் பெற்றார். அவர் திருப்பதிகங்களில் இவற்றை உணரலாம்.

(தொடரும்)

# தமிழ் செழிக்கும்

ஆறுவிரல் ஐம்பொறி

உரையாற்றும் இளைஞர்களின் உழைப்புக் குள்ளும்
உயிர்த்தமிழை ஆராய்வோம். தமிழ்செ ழிக்கும்.
நரைகொண்ட முதியவரின் அறிவுக் குள்ளும்
நற்றமிழை ஆராய்வோம் தமிழ்செ ழிக்கும்.
நிறைவாகக் கல்லாதார் வாழ்வுக் குள்ளும்
நிலைத்தமிழை ஆராய்வோம். தமிழ்செ ழிக்கும்.
சிறையுள்ள அடிமைகளின் உணர்ச்சிக் குள்ளும்
சீர்தமிழை ஆராய்வோம். தமிழ்செ ழிக்கும்.

தரையினிலே கிடைக்கின்ற தாள்கள் உள்ளும்
தண்டமிழை ஆராய்வோம். தமிழ்செ ழிக்கும்.
மறைவினிலே எடைபோட்ட நூல்கள் உள்ளும்
மணித்தமிழை ஆராய்வோம். தமிழ்செ ழிக்கும்.
கறைபட்டுக் கட்டவிழ்ந்த சுவடிக் குள்ளும்
கனித்தமிழை ஆராய்வோம். தமிழ்செ ழிக்கும்.
இறையில்லை எனக்கூறும் ஏட்டுக் குள்ளும்
இயற்றமிழை ஆராய்வோம். தமிழ்செ ழிக்கும்.

அரையுண்டி உழவர்களின் ஈகைக் குள்ளும்
அருந்தமிழை ஆராய்வோம். தமிழ்செ ழிக்கும்.
வரையுச்சி வாழ்வோரின் அன்புக் குள்ளும்
வன்றமிழை ஆராய்வோம். தமிழ்செ ழிக்கும்.
இரையுணவு இரப்பவரின் இடும்பைக் குள்ளும்
இன்றமிழை ஆராய்வோம். தமிழ்செ ழிக்கும்.
இறைபக்தி பரப்புகின்ற கவிதைக் குள்ளும்
இசைத்தமிழை ஆராய்வோம். தமிழ்செ ழிக்கும்.

# ஸ்ரீமத் குமரகுருதாச சுவாமிகளின் அருள் வாழ்வும் திருப்பா இலக்கியமும்

திருமதி. ச. வனிதா
*அண்ணாமலை நகர்*

## அருள் வாழ்வு

பத்தொன்பதாம் நூற்றாண்டின் பிற்பகுதியில் அதாவது கி.பி. 1850களில் சைவ நெறியோங்கும் குடும்பத்தில் சாத்தப்பர் செங்கமலம் பெற்றோருக்கு ஞானக் குழந்தையாக இராமேசுவரத்தில் பிறந்தவர்தான் ஸ்ரீமத் குமரகுருதாச சுவாமிகள். பெற்றோர் இவருக்கு இட்ட பெயர் அப்பாவு என்பதாகும். இளமையில் குருகுலக் கல்வியை இராமேசுவரத்தில் வசித்த முனியாண்டியா பிள்ளையிடம் பெற்றார். பின்னர் அவ்வூரில் அமைந்திருந்த கிறித்துவ நிலையத்தில் தமது உயர்கல்வியைக் கற்றுத் தெளிவு பெற்றார். குமரகுருதாசருக்கு உலகியல் கல்வியைக் காட்டிலும் இறையியல் கல்வியே அதிகம் பிடித்திருந்தது. அதனால் உலகியல் கல்வி தடைபட்டது. நண்பர்களோடு விளையாடிக் கொண்டிருந்தபோது அபூர்வமான தெய்வக் காட்சிகளைக் கண்டுணர்ந்த நிகழ்வைப் பதிவு செய்ததும், நண்பர்கள் சோதிடர் உள்ளிட்டோரும் நீ பின்னாளில் பெரிய ஞானியாக வருவாய் என்றனர். அதற்கு ஏற்பவே சிவனருள் உந்துதலால் அவரது ஆன்ம மலர்ச்சி வளர்ந்தது.

வயலில் தந்தையார் பணிபுரிந்து கொண்டிருக்கும் போது சுவாமிகள் தமது கையில் ஏற்புக் கவசம் வைத்திருந்தார். அதுபோலவே ஒரு நூல் எழுதவேண்டும் என்று இறைவனிடம் வேண்டிக் கொண்டார். பின்னர் முருகனை தியானித்துக் கொண்டார். உன்னைப் பாடும் பணியை எனக்கருள வேண்டும் என்று கேட்டுக் கொண்டார். ஒவ்வொரு பதிகப் பாடல் முடிவிலும் அருணகிரிநாதர் பெயரை வைத்தே முடிப்பேன் எனவும் அவரது வாக்குத்திறம் எனக்கும் வேண்டும் எனவும் வேண்டிக் கொண்டார். 'கங்கையைச் சடையிற் பரித்து பரித்து' எனத் தொடங்கி, ஆதியே அமரர்கோவே என முடித்து ஒரு முறை உரக்கப் படித்தும் இறைவா எனது பாடலை ஏற்றுக் கொள்ள வேண்டும் என்றும் வேண்டிக் கொண்டார். இவ்வாறே நாள்தோறும் ஒரு பாடல் இயற்றினார். நூறு நாட்களில் நூறு பாடல்களை இயற்றினார்.

அத்தொகுப்பின் தெய்வத் தன்மையையும் பெருமையையும் உணர்ந்த சேது மாதவ ஐயர் என்பவர் மிகச் சிறந்த முருகபக்தர். தமது இருப்பிடத்திற்கு அப்பாவுவை வரவழைத்து திருவாறெழுத்து மந்திரத்தையும் சமஸ்கிருத நூலையும் பயில வேண்டும் என்று கூறினார். அதனால் சுவாமிகள் சமஸ்கிருதமும் பயின்றார்.

முருகப்பெருமான் அருட்கவிஞரின் கனவில் வந்து உணவு அளித்து அவரது இருப்பிடத்திற்கு அனுப்பி வைத்தார். அது நாள் முதல் தமிழ், வடமொழி நூல்களின் அறிவைப் பெற்றார். பாடும் திறனும் கைவரப் பெற்றார்.

முருகன் அருளால் தச்சர் ஒருவர் பாதக்குறடு செய்து தந்தார். மந்திர உபதேசம் செய்த ஆசிரியர் வற்புறுத்த திருமணம் செய்து கொண்டார். பெண் குழந்தை பிறந்தது. துறவு நோக்கிய சுவாமிகள் பழநிக்கு வர முருகனிடம் பொய் சொன்னார். அதனால் நான் சொல்லும் நாள் வரையில் நீ பழநிக்கு வரக்கூடாது என்று கட்டளையிட்டதாகவும் செவிவழிச் செய்திகள் புலப்படுகின்றன.

பிறகு தமிழகக் கோயில்கள் முழுவதும் சென்று வழிபாடு செய்தார். காஞ்சியில் வழிபாடு நிகழ்த்தித் திரும்பும் போது குமரக்கோட்டம் சென்றதுண்டா எனச் செம்மேனிச் சைவர் கேட்க அது எங்குள்ளது என வினவ சுவாமிகளைக் குமரக்கோட்டம் கொடிமரம் வரையில் அழைத்து வந்து வழிகாட்டியது இறைவன் முருகனே என்பதை உணர்ந்தார். இராமேஸ்வரப் பெருமானை வழிபட்டு வரும்போது முருகன் கனவில் தோன்றி சிவாலய வழிபாட்டில் சாஷ்டாங்க நமஸ்காரம் செய்யவேண்டும் எனக் கூற அவ்வாறே செய்தார். இவ்வாறு முருகன், சுவாமிகள் வாழ்வில் பல அற்புதங்களை நிகழ்த்தினார். பிரப்பன் வலசையில் மயானக் காட்டில் கடுந்தவம் மேற்கொண்டார். அப்போது அவருக்கு வயது நாற்பத்தொன்று. முப்பத்தைந்து நாட்கள் நிட்டையில் இருந்தபோது பல்வேறு துன்பங்கள் அவருக்கு ஏற்பட்டன. பேய்களின் அச்சுறுத்தல் இருந்தன. எல்லாவற்றையும் கடந்து எனக்கு இக்காலத்து மனிதர்களுள் ஞான ஆசிரியனாக ஒருவரும் வேண்டாம். முருகனே எனக்கு நீயே சொல்ல வேண்டியதை சொல்ல வேண்டும் எனக் கேட்டுக் கொண்டார். அதன் பயனே நிட்டையிலிருந்து எழுவாய் எனக் கட்டளை வந்தது. நிட்டையின் போது கிடைத்த உபதேசத்தின் சிறப்பே தகராலய ரகசியம் எனும் நூலாக எழுதினார்.

ஓராண்டு சென்ற பின்னர் துறவறம் மேற்கொண்டு பாம்பனை விட்டு நீங்கிச் சென்னைக்கு வந்தார். முருகனின் துணையோடு உண்மையான துறவு வாழ்க்கையை மேற்கொண்டார். தகுதியும் பக்குவமும் வாய்ந்த அன்பர்களுக்கு ஞானதீக்கையும் திருவாறெழுத்து மந்திரத்தையும் கற்றுக் கொடுத்தார். சென்னையில் ஓராண்டு சென்ற பின்னர் சிதம்பரம் அருகில் உள்ள குயவன் பேட்டையில் தங்கினார். அங்கு பரிபூராணந்த போதம், தகராலய ரகசியம் என்னும் ஒப்பற்ற சாத்திர நூல்களையும் கந்தர் ஒலியில் அந்தாதி, குகப்பிரம அருட்பத்து முதலான தோத்திரங்களையும், திருப்பா எனப்படும் வேதசமானமான நூலையும் இயற்றினார். கும்பகோணம் வரையில் சென்று பல தலங்களையும் வணங்கிவிட்டு சிதம்பரம் வந்தார். மீண்டும் இறையருளால் சென்னைக்குச் சென்றார்.

கி.பி. 1902ஆம் ஆண்டில் காசியாத்திரை மேற்கொண்டார். அங்குதான் குமரகுரு திருமடத்தில் தங்கியிருந்தார். அவரின் வெள்ளாடை காணாமல் போக துறவி ஒருவர் இரண்டு காவியாடைகளைக் கொடுத்து அணிந்து கொள்ளச் செய்தார். அதனால் அன்றிலிருந்து செவ்வாடையணியத் தொடங்கினார். காசி அனுபவங்களை காசியாத்திரை என்னும் தத்துவ நூலாக உருவாக்கியவர்.

சுவாமிகள் சென்னையில் பசித்துன்பத்திற்கு உள்ளானார். நிட்டையில் இருந்து வந்தார். சுவாமிகள் சித்துக்கள் செய்யாததனால் இவரிடம் உபதேசம் பெற்றவர்கள் விலகினர். பின்னர் குமரவேல் பதிற்றுப்பத்தந்தாதி நூலை உருவாக்கினார்.

சுவாமிகள் சென்னையிலிருந்து சிதம்பரம் வந்தார். பின்னத்தூர் என்னும் ஊரில் சிவநிட்டையில் இருந்தார். காட்டுமன்னார்கோயிலில் வைணவர்கள் சிவனடியார்களுக்குக் கேடுகளை விளைவித்தனர். அதை முறியடிக்க நீதிமன்றம் வரையில் சென்றார். வைணவர்களோடு வாதங்களில் ஈடுபட்டார். நூற்றெட்டு உபநிடதங்களும் ஆகமங்களும் வேதங்களும் சைவசித்தாந்தத்தையே உறுதிப்படுத்துபவை என்பதை விளக்கினார். அப்போது எழுதிய நூல் தான் சைவ சமய சரபம். சைவ சித்தாந்த சமயத்தைக் காப்பாற்றினார். 1904 முதல் 1911 வரையில் இப்போராட்டம் நிகழ்ந்தது. சுவாமிகள் மீண்டும் சென்னைக்கு வந்தார். புதுப்பாக்கத்தில் தங்கினார். பரிபூரணானந்தம் நூலுக்குச் சூரியப் பிரகாசம் என்னும் உரையை எழுதினார். தகராலய ரகசியம் நூலுக்கு சதானந்த சாகரம் என்னும் உரையையும்

எழுதினார். தமக்கு ஏற்பட்ட துன்பத்திலிருந்து நீங்க வேண்டிச் சுவாமிகளால் பாடப்பட்ட நூல் கி.பி. 1891இல் குமாரஸ்தவம், பின்னர் சிவஞான தீபம் என்னும் உரைநடை நூலையும் இயற்றினார்.

கந்தபுராணம் போலவே இவர் இயற்றிய காவியம் 'ஸ்ரீமத் குமாரசுவாமியம்'. இது ஐந்து காண்டங்கள் கொண்டது. 1923இல் சென்னையில் குதிரை வண்டி மோதியதால் காலில் அடிபட்டு எலும்பு முறிந்தது. மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார். மருத்துவர்கள் எலும்பு கூடுவது கடினம் என்றனர். அவரின் அன்பர் ஒருவர் சண்முகக் கவசம் பாடியதால் அவரது எலும்பு கூடுவதுபோல் உணர்ந்தார். பதினைந்து நாளில் கூடியது கண்டு மருத்துவர்கள் ஆச்சரியப்பட்டனர். முருகன், சுவாமிகளின் கனவில் தோன்றி பதினைந்து நாளில் கால் குணம்பெறும் என்று உரைத்ததற்கு ஏற்ப கால் குணமாயிற்று. மயில் வாகனக் காட்சியும் சுவாமிக்கு கிடைத்தது. அந்தக் காட்சியைத்தான் பின்னர் அசோக கால வாசம் என்னும் எட்டுப் பதிகங்களாகப் பாடி ஸ்ரீமத் குமாரசுவாமியம் காவியத்தில் சேர்த்தார். இதை நினைவுபடுத்தும் விதமாகவே ஆண்டுதோறும் மார்கழித் திங்கள் வளர்பிறைப் பகுதியுடன் முதல் நாள் மயூரவாகன சேவனம் என்னும் திருவிழா நடத்தப்படுகின்றது.

சுவாமிகள் பெங்களூர் சென்றபோது ஒரு பேரராளி தம்மைச் சூழ்ந்து வாய் வழியே நுழைந்து இதயத்தை மேலெழுப்புவது போன்ற அனுபவம் கண்டார். பின்னர் சென்னை வந்து திருவான்மியூரில் நிலம் பார்க்கச் சொன்னார். சீடர் சின்னசாமிப் பிள்ளை அதற்கான ஏற்பாடுகளை செய்தார். 30.05.1929 காலை 7.15 மணி அளவில் சுவாமிகள் சுவாசத்தை உள்ளுக்கு இழுக்க அது வெளிவராமல் உந்தியிலேயே அடங்கியது.

ஸ்ரீமத் பாம்பன் குமரகுருதாச சுவாமிகள் இயற்றிய பாடல்கள் மொத்தம் 6666. இவை ஆறு மண்டலங்களாகத் தொகுக்கப்பட்டுள்ளது. முதல் மண்டலத்தில் திருப்பாடல்களான ஆனந்தக் களிப்பு சமாதான சங்கீதம் உள்ளிட்ட 1268 பாடல்களும் இரண்டாவது மண்டலத்தில் திருவலங்கற்றிரட்டு இரண்டு காண்டங்கள் 1135 பாடல்களும் மூன்றாவது மண்டலத்தில் காசியாத்திரை (230), பரிபூரணானந்த போதம் (608), தகராலய ரகசியம் (117), ஆக 955 பாடல்கள் இப்பகுதியில் இடம் பெற்றுள்ளன. நான்காவது மண்டலத்தில் சிறுநூல் திரட்டு (258) பல தலங்களில் பாடியது (35) சேந்தன் செந்தமிழ் (50) பத்துப்பிரபந்தம் (31) குமரவேள் பதிற்றுப் பத்தாந்தாதி (100) குமாரஸ்தவம் (44) செக்கர்வேள் செம்பிரப்பு (198) செக்கர்வேள் இறுமாப்பு

( 64 ) ஜீவயாதனா வியாசம் ( 235 ) ஆக பாடல்களின் தொகை ( 1015 ) ஐந்தாவது மண்டலத்தில் திருப்பா பாடல்களின் எண்ணிக்கை 1101. ஆறாவது மண்டலத்தில் ஸ்ரீமத் குமாரசுவாமியம் 1192 பாடல்கள்.

சுவாமிகள் இயற்றிய நூல்களில் தோத்திர நூல்களான சண்முகக் கவசம், குமாரஸ்தவம், பரிபூரண பஞ்சாமிர்த வண்ணம், பகைகடிதல் முதலானவை மந்திரங்களின் சாரங்களாகத் திகழ்பவை. இவர்தம் நூல்களைப் பாராயணம் செய்யும் மெய்யன்பர்கள் கட்டாயம் சில விதிகளை மனத்துள் பதிவாக்கிக் கொள்ள வேண்டும். அவற்றுள் மிக முக்கியமானவை திருநீறு அணிந்து கொள்ள வேண்டும். பாடல்களை எழுத்துப் பிழையற ஓத வேண்டும். பாடல்களைக் கருத்தூன்றிப் படித்தால் மனோலயம் நிலை பெறும். நம்பிக்கையுடன் செயல்பட வேண்டும். காலை, நண்பகல், மாலை மூன்று வேளைகளிலும் பாடல்களைப் படிக்கலாம். நாள்தோறும் பாராயணம் செய்தல் வேண்டும். எந்த ஒரு தோத்திரத்தையும் அரைகுறையாகப் பாதியில் நிறுத்தக் கூடாது. புலால் உணவு, கள், மது, பீடி, சிகரெட் பழக்கங்களை நீக்கிப் பாராயணம் செய்தால் எல்லா நலன்களும் கிடைக்கும் என்பது இவர்தம் நெறியாகும். இவரைப் பின்பற்றும் மெய்யன்பர்கள் தொடர்ந்து இவற்றைப் பின்பற்றுகின்றனர். இவர்தம் பாடல்களில் திருப்பா நூலில் இடம்பெற்றுள்ள இலக்கிய ஆக்கச் செய்திகளை இனிக் காணலாம்.

## திருப்பா சிறப்புகள்

திருப்பா என்பது 1100 பாடல்கள் கொண்டது. இதிலமைந்த முதல் 43 பாடல்களுக்கு ஸ்ரீமத் குமரதாச சுவாமிகளே உரை வரைந்துள்ள சிறப்பு பெற்றது. திருப்பா அதியற்புத ஞான சாத்திர நூல். இந்நூலை வேதம், ஆகமம், சைவத் திருமுறைகள், ஸ்ரீமத் அருணகிரிநாதர் ஆகியோர் உருவாக்கிய ஞான சத்திரங்களை ஆராய்ந்து சைவ நெறியார்கள் கொள்ள வேண்டியது சுத்த அத்வைத வைதிக சைவ சித்தாந்த மார்க்கம் தான் என்று சொல்கிறது. ஏக தெய்வ-ஏக மூர்த்த வழிபாடே இதயார்ச்சனைக்கு உகந்தது என்றும் அறுமுக சிவவழிபாடே மிகச் சிறந்த முறை என்றும் உரைக்கும் நூல்.

ஆகம சித்தாந்தம் என்பதும் சைவ சித்தாந்தம் என்பதும் ஒன்றுதான். சுவாமிகள் இயற்றிய பிரிபூரணானந்த போதம், தகராலய ரகசியம், திருப்பா என்னும் மூன்று நூல்களும் இருபதாம் நூற்றாண்டில் தமிழுக்கும் சைவ உலகிற்கும் கிடைத்துள்ள மிகப்பெரிய வைரக் கிரீடங்களாகும். மூன்றனுள் திருப்பா என்பது தன்னிகரில்லாததாகவும் தரமும் வாய்க்கப் பெற்றது. ஒருவர்

சிவசுக மயமான ஆன்மீக வாழ்க்கை நிலையை அனுபவிக்க விரும்புவோர் வேறொன்றையும் பயிலாது திருப்பா என்னும் நூல் ஒன்றை மட்டும் பயின்று உணர்ந்து பக்குவமும் அனுபவமும் பெற்றாலே போதுமானது என்ற சிறப்பும் இந்நூலுக்குரியதாகும்.

இதில் அமைந்த சிறப்பு என்று பார்க்கும் போது முனிபுங்கர் இயற்றிய 108 உபநிடதங்களின் கருத்துக்களின் சிந்தனைகள், கந்தபுராணம், பெரியபுராணம் ஆகிய நூல்களில் இடம்பெற்றுள்ள அருள் நிகழ்ச்சிகள், கோட்பாடுகள் கவனப்படுத்தப்பட்டுள்ளன. தொல்காப்பியம், சங்க இலக்கியம் முதலியவற்றில் காணப்படும் கட்டுக்கோப்பான தமிழ் அமைப்பு முறை பற்றிய சிந்தனை, பன்னிரு திருமுறைகள் சித்தாந்த நூல்கள் வெளிப்படுத்தும் ஆன்ம விஞ்ஞானக் கொள்கைகள் ஆகியவற்றை உள்வாங்கியே இந்நூல் ஆக்கம் பெற்றுள்ளது. மற்றொரு சிறப்பும் இந்த நூலில் உள்ளது. இதில் இடம்பெற்றுள்ள 93 முதல் 110 வரையிலான பதினெட்டுப் பதிகங்களும் பதினெட்டு சிவாகமங்களுக்கு நிகரானவை என்று சொல்லும் அளவிற்கு உயர்ந்து நிற்கும் பகுதியாகும்.

கடவுள் வாழ்த்துப் பகுதியில் மூன்று பாடல்கள் இடம் பெற்றுள்ளன. வேதம், சிவாகமம் என்னும் சாரமாக விளங்கும் சச்சிதானந்த சிவசுவாமியைத் தியானம் செய்வோம் என்கின்றார். குகப்பிரமம் என்னும் பெரிய பொருளைச் சக நினைவைக் கொண்டு நினையாது பர நினைவைக் கொண்டு நினைந்து வணங்குவோம் என்கின்றார். திருவருள் மூலம் என்னும் பாடல் தலைமைப் பொருளாய் இருக்கும் வைதிக சைவ மார்க்கத்தின் முதற் கடவுளாகிய வத்துவை, வாக்கு, மனம் போன்றவற்றால் நின்மல சுத்த சிவ சுப்பிரமணியத்தை வணங்கித் துதித்து வாழ்வோம் என்பதுரைத்துள்ளமையும் கருத்துரைப் பகுதிகளாக இடம் பெற்றுள்ளன.

பரமபதி என்னும் பகுதியில் சிவபெருமானின் அடிமுடி குறித்து ஒரு பாட்டில் விளக்கும் போது இறைவனது திருவடி என்பது கீழே ஏமு பாதாளங்களையும் ஊடுருவி ஆழ்ந்து விளங்குவது. இறைவனின் திருமுடி என்பது சிந்தையும் மொழியும் எட்டாததும் அனைத்தையும் கடந்து மேலுயர்ந்து இருப்பது என்னும் கருத்து பெறப்படுகிறது. பதி, பசு, பாசம் பற்றியும் பேசப்பட்டுள்ளன.

சுப்பிரமணியப்பரமத்தில், உலகில் அகண்ட தத்துவப் பொருள் சுப்பிரமணியப் பரம்பொருள்தான் என்கின்றார். இன்பப் பிரவாக சிவத்தில்

யோக அனுபவங்களில் இருப்பவர்களுக்கு இறைவன் இன்பவெள்ளமாகப் பெருக்கெடுப்பான் என்பதை உய்த்துணர வைத்துள்ளார். அருணகிரி நாதருக்கு அருள் செய்த இறைவனே எனக்கும் அருள் செய்ய வேண்டும் என ஆனந்தமான பொருள் பகுதியில் புலப்படுத்தியுள்ளார்.

இருள், ஒளி என்னும் இருநிலைக் கடந்தவன் இறைவன் அனைத்திற்கும் அப்பாற்பட்ட பரம்பொருள் என விரித்து தன்னை ஆட்கொள்ளப் பணிப்பதே ஆனந்த நடன சிவம் ஆகும். நின்மலானந்தபரத்தில் ஞானிகள் எத்தகைய கவர்ச்சிப் பொருளுக்கும் ஆளாக மாட்டார்கள். ஞானநெறியும் உறுதியோடு இருப்பவர்களின் உள்ளத்தில் வெளிப்படுபவர் முருகப் பெருமான் என்று உரைக்கின்றார்.

பரசுப்பிரயமணிய வாழ்வு என்பது ஞானப்பேற்றால் பிரம்மப் பொருளை உள்ளவாறு அறிவதாகும். சிரத்தை, பக்தி, தியானம், யோகம் இவற்றை முறையாக மேற்கொண்டு சாதனை செய்தால் சிவஞானப்பேறு முழுமையாகப் பெறமுடியும் என்று யசூர் வேதத்தைச் சார்ந்த கைவல்லிய உபநிடதம் கூறும். இதனை கருத்துருவாக்கியே குமரகுருநாத சுவாமிகள்

*சிரத்தையரும் பத்திதியானம் யோகங் காரணமாச் சிவஞானந்தான்*
*நிரப்புறவே வாய்க்குமெனா யசுவின்கை வலியோப நிடதங்கறும்*
*உரப்பில்லே னுக்கவைதா மெந்தவா றமைவுறுமன் புடையர்க்கீங்ல்*
*வரந்தரசே யருள்புரியா யெனையாளும் பரசுப்பிரமணிய வாழ்வே* (13-4)

எனப் பாடியருளியுள்ளார். மேலும் திராவிட வேதமாக உள்ள திருவாசகத்தில் 'தெள்ளேணம்' என்னும் பகுதியில் கூறப்பட்டுள்ள கருத்துக்களை வெளிப்படுத்தும் நோக்கில்,

*'திராவிடவோத் தேயுறுதெள் ளேணத்திற் சொனபோதச் சிதைவுஞ் சைவ*
*புராணவளிச் சங்கிதையின் ஞானநிலை யுரைத்தவயிற் புகன்ற வண்ணம்*
*அராகமல மாயைகெடிற் சிவனாவன் சீவனென்னு மமைவு மெற்கு*
*வராமலுமுய் வேனாற்றப் புதன்புகழென் பரசுப்பிரமணிய வாழ்வே'* (13-10)

என்று பாடியுள்ள திறம் போற்றத்தக்கது.

குகசம்பு குறித்த கருத்தாடலில் சைவசித்தாந்தம் உரைக்கும் முப்பத்தாறு தத்துவங்கள் உரைக்கப்பட்ட நெறியை விளக்கியும் சிவநிலையை

அடையும் நெறியையும் எடுத்துக் கூறி மௌன நிலையைக் கடைபிடித்துச் சும்மா இருத்தல் சிறப்புக்குரியது எனவும் வெளிப்படுத்திய சுவாமிகள் ஓரிடத்தில்,

*வசுதை தொடங்கிய ருஞ்சிவம் வரைசது வொன்பது மின்றியொன்*
*சுசிசுட ருஞ்சிவ நின்றிடுந் துவிதம கன்றிதீ லொன்றுதல்*
*உடசிதவருஞ்சிவ மென்றுநன் குறுமருணந்திப கர்ந்ததிற்*
*கசிவுடை யென்றனை யென்றும்வை களிகிளரென்குக சம்புவே* (14-2)

என விளித்து பாடியுள்ளமை அறியத்தக்கது.

இவ்வாறே திருவருட்கடல், பராபரம், பரம்பொருள், முதலான நூற்றுக்கு மேற்பட்டத் தலைப்புகளில் திருப்பாடல்கள் இயற்றித் தங்கவம்பலம் என்ற தலைப்பில் திருப்பா பாடல்களை நிறைவு செய்துள்ளார்.

தங்கவம்பலத்தில் உரைக்கப்பட்டுள்ள செய்திகள் சுந்தரர் தேவாரப் பாடல்களை மனத்துள் கொண்டு பாடப்பட்டுள்ளன. இருண்ட நெஞ்சம் கொண்டோர் வஞ்சகத் தன்மையோடு உங்களைப் பார்த்தால் சிறிதும் மனம் வருந்தாமல் யாதொரு பழிப்புரையும் கூறாமல் விட்டுவிடுங்கள். திருஞான சம்பந்தருக்கு ஏற்பட்ட கனவு நிலைகளை உறுதியாக நம்புகின்ற வாழ்க்கை நெறியை ஏற்படுத்திக் கொள்ளுங்கள். அருட்பேற்றை உண்டாக்கும் தியான பாவனையை மேற்கொள்ள வேண்டும் என்கின்றார். அகவுணர்வில் காமன் இடையறாது மலர் அம்புகளைத் தொடுப்பது போல் என்மீது அருள் அம்புகளை இறைவன் முருகப் பெருமான் எனக்கு அருளுவார் என்று உரைத்துள்ளார். குமரகுருதாச சுவாமிகள் தனக்குண்டான இறை அனுபவங்களையும் சைவசித்தாந்தக் கருத்துக்களையும் வேத ஆகமங்களில் மொழியப்பட்டுள்ள கருத்தாடல்களைக் கவனப்படுத்தியும் தனக்கு அருள்பாவிக்க வேண்டும் என்று உரைத்துள்ளார். தவ முன்னோர்களான திருமுறை ஆசிரியர்கள், திருப்புகழ் அருளிய அருணகிரிநாதர் உள்ளிட்ட ஞான ஆசிரியர்களின் வாழ்வில் நடைபெற்ற அருளியல் நிகழ்வுகளையும் இறைவன் அவர்களுக்கு அருள்தந்த நெறிகளையும் எடுத்துக் கூறி அவர்களின் வழியே எனக்கும் அருள்புரிய வேண்டும் என்று திருப்பாடல்களில் புலப்படுத்தியுள்ளார்.

# அகநானூற்றில் ஒரு பொருட் பல சொற்கள்

பெ. முருக லெட்சுமி
சிவகாசி

செம்மொழியாம் தமிழ்மொழியில் சொற்கள் காலத்தின் மாற்றத்தால் வளர்ச்சியும் மாற்றமும் ஏற்படுகின்றன. மாற்றம் பொதுவாக சொற்களிலும் பொருள்களிலும் பெறுகின்றன. சொல்வளர்ச்சி என்பது ஒரு மொழியில் காலப்போக்கில் சொற்களின் பொருளில் ஏற்படும் வளர்ச்சியாகக் கொள்ளப்படுகிறது. அவ்வகையில் மொழியின் சொற்கள் அகராதியியல் நோக்கில் ஒரு பொருட் பல சொற்கள், பலபொருள் ஒருசொல், எதிர்ச்சொல் - கீழ்ச்சொல் என வகைப்படுத்தப்படுகின்றன. இவற்றுள் ஒருபொருட் பல சொற்கள் மொழியின் வளர்ச்சியில் முக்கியப் பங்கு வகிக்கின்றன.

## ஒருபொருட் பல சொற்கள்

ஒரு தொடரில் குறிப்பிட்ட சொல் உள்ள இடத்தில் பிறிதொரு சொல்லைப் பதிலீடு செய்கையில் அத்தொடர் உணர்த்தும் பொருளில் எவ்விதமாற்றமும் இல்லாமல் இருக்குமானால் அந்த இரண்டு சொற்களும் ஒரு பொருட் பல சொற்கள் எனப்படும்.

அகநானூற்றில் ஒரு பொருள் பலசொற்கள் மிகுதியாகக் காணப்படுகின்றன. அவற்றுள் ஒவ்வொரு சொல்லுக்கும் இரண்டு முதல் பத்துக்கும் மேற்பட்ட ஒரு பொருள் பல சொற்கள் இடம் பெறுகின்றன. இவை பொருட்பெயர், இடப்பெயர், காலப்பெயர், சினைப்பெயர், குணப்பெயர், தொழிற்பெயர் என இலக்கண நூலார் பகுத்துக்கூறிய பெயரின் அடிப்படையில் பகுத்தறியத் தக்கனவாக அமைகின்றன.

## பொருட் பெயர்கள்

அகநானூற்றில் ஒரு பொருட் பன்மொழியாக இடம் பெற்றுள்ள பொருட் பெயர்களை உயர்திணைப் பொருட் பெயர்கள், அஃறிணைப் பொருட்பெயர்கள் என இருவகையாகப் பகுக்கலாம்.

## உயர்திணைப் பொருட் பெயர்கள்

உயர்திணைப் பொருட் பெயர்கள் என்னும் பாகுபாட்டின் கீழ் பெண், தெய்வம், தலைவன், சிறுவர், பகைவர், முருகன், வீரர், மக்கள், வேடன் ஆகியோரைக் குறிக்கும் பலபெயர்கள் அகநானூற்றில் இடம்பெறுவதைக் குறிப்பிடலாம்.

'பெண்' என்னும் பெயரினைக் குறிக்க மகள் ( 7-6 ), அரிவை (அகம் 4-17) ஆட்டி (165 - 6) மகடூ (141-14) பெண்டு (63-14) ஆகிய சொற்கள் அகநானூற்றில் எடுத்தாளப்பட்டுள்ளன. பெண்ணின் பருவங்களில் ஒன்று 'அரிவை' எனும் சொல்லாகும். ஆனால் அகநானூற்றில் 'அரிவை' எனும்சொல் பெண் எனும் பொதுப்பொருளை உணர்த்தி நிற்கிறது. பெண் என்ற சொல்லில் இருந்து பெண்டு எனும் சொல் பிறந்துள்ளது. ஆகவே பெண்டு எனும் சொல் பெண் எனும் பெயரினை உணர்த்தி நிற்கிறது எனலாம். தொல்பழங்காலத்தில் சொல் இனிமைக்காக மெய்யீற்றுச் சொற்களோடு உகரஞ்சேர்ப்பது பேச்சு வழக்கில் இயல்பாயிருந்தது. எனவே மகள் எனும் சொல்லை மகள் - மகடு-மகடுஉ என்று அளபெடையில் நீட்டி ஒலித்தனர். அதன்படி அகநானூற்றில் மகடுஉ எனும் சொல் 'பெண்' எனும் பொதுப் பெயரினை உணர்த்தி நிற்கிறது.

முருகன் எனும் பெயரினை உணர்த்த செல்வன் (98-18) நெடியோன் (149-16), நெடுவேள் (22-6), முருகு (22-1) எனும் சொற்கள் அகநானூற்றில் எடுத்தாளப்பட்டுள்ளன. இவற்றில் செல்வன் என்ற சொல் குழந்தைப் பருவ முருகனை குறிப்பிடுவதற்காக எடுத்தாளப்பட்டுள்ளது எனக் கொள்ளலாம். முருகு (22-1) என்ற சொல் முருகனின் அழகினைக் குறிப்பிடுவதாக உள்ளது. நெடியோன், நெடுவேள் எனும் சொற்கள் இறைவனின் புகழினை, பண்புகளைக் குறிப்பதாக அமைந்துள்ளன.

தலைவன் எனும் பெயரினை உணர்த்த கிழவன் (66-17) நெடுந்தகை (49-10), கோமான் (35-14) பெருமகன் (69-17) ஆகிய ஒருபொருள் பலசொற்கள் இடம் பெற்றுள்ளன. நெடுந்தகை எனும் சொல்லுக்கு 'பெரிய மேம்பாடுள்ளவன், பெரிய நிலைமையுடையவன்' என செந்தமிழ் சொற்பிறப்பியல் அகரமுதலி விளக்கம் தருகின்றது. அகநானூற்றில் நெடுந்தகை எனும் சொல் பெரிய தகுதிப்பாடுடையவன் என்று தலைவனின் பண்பை வெளிப்படுத்துவதாக அமைந்துள்ளது. கோமான் (35-14) எனும் சொல் ஊருக்குத் தலைவன் என்பதையும், பெருமகன் (69-17) எனும் சொல் மறவர் கூட்டத்திற்குத் தலைவன் என்பதையும் சுட்டிநிற்கிறது.

பகைவர் என்பதைக் குறிப்பதற்கு தெவ்வர் (113-18) ஒன்னார் (127-6) நண்ணார் (124-1) ஆகிய சொற்கள் ஆளப்பட்டுள்ளன. 'ஒன்னார் எனும் சொல்லுக்கு ஒன்றாதவர்' என்று அகரமுதலி விளக்கம் தருகின்றது. அகநானூற்றில் 'நல்நகர் மரந்தை முற்றத்து ஒன்னார்' (அகம். 127-5) என்ற தொடரில் ஒன்னார் எனும் சொல் தம்முடன் ஒன்றாதவர் என்பதைக் குறிப்பதாக உள்ளது. நண்ணுநர் எனும் சொல்லுக்கு எதிரான சொல் நண்ணார் என்பதாகும். இதில் நண்ணுநர் என்பதற்கு நட்பினர்' என்று அகரமுதலி 'விளக்கம் தந்துள்ளது. ஆகவே தம்முடன் நட்பில்லாதவர் என்பதைக் குறிப்பதற்காகவே நண்ணார் எனும் சொல் பகைவர் எனும் பெயரினை உணர்த்தி நிற்கிறது எனலாம்.

தெய்வம் என்ற பெயரினை உணர்த்த அணங்கு (7-4), சூர் (91-4) எனும் சொற்கள் அகநானூற்றில் இடம் பெற்றுள்ளன. அகநானூற்றில் அணங்கு, சூர் என்ற இரு சொற்களும் வருத்தும் தெய்வத்தைக் குறிப்பிடுவதற்காக ஆளப்பட்டுள்ளன.

வீரர் என்ற பெயரினை உணர்த்த மள்ளர் (21-13) மழவர் (1-2) மறவர் (35-6) எனும் சொற்கள் எடுத்தாளப்பட்டுள்ளன. அகநானூற்றில், குறிப்பிட்ட இன மக்களின் வீரத்தன்மையைப் புலப்படுத்துவதற்காக மள்ளர், மழவர், மறவர் எனும் சொற்கள் வீரர் எனும் பொருட்புலத்தின் கீழ் அமைந்துள்ளன.

## அஃறிணைப் பொருட்பெயர்

அகநானூற்றில் அஃறிணைப் பொருட்பெயர் பாகுபாட்டின் கீழ் நீர், உணவு, தீ, காளை, அம்பு, பசு, எருமை, மூங்கில், வேல், ஓலை, அரும்பு, வண்டு, கரடி, ஞாயிறு, நாய், கள், தேன், உருளை, பாம்பு, சோறு, பூ, சந்திரன், யானை, செல்வம், பறவை, மயில், ஓவியம், கயிறு, வண்டி, காற்று, ஒளி ஆகியவற்றைக் குறிக்கும் பல பெயர்கள் இடம் பெற்றுள்ளன.

## விலங்கினப் பெயர்கள்

அகநானூற்றில் பசு, எருமை, கரடி, நாய், பாம்பு, யானை, குதிரை, மான், புலி, குரங்கு ஆகியவற்றைக் குறித்த ஒரு பொருட் பன்மொழிகள் இடம் பெற்றுள்ளன.

பசு என்பதைக் குறிக்கும் பெயர்களாக கறவை (49-5) ஆன் (14-9) ஆ (7-14) நாகு (64-12) ஆகிய சொற்கள் இடம் பெறுகின்றன. 'நாகு' எனும்

சொல் 'எருமையும் மரையும் பெற்றமும் நாகே ( தொல். மரபு. 63 ) எனும் தொல்காப்பிய மரபுப்படி பெண்பசுவினைக் குறிக்கும் பொதுச் சொல்லாக கையாளப்பட்டுள்ளது. ஆ என்ற சொல்லில் இருந்தே ஆன் என்ற சொல் பிறந்துள்ளது. எனவே ஆ என்ற சொல் ஓரெழுத்து ஒரு மொழியாக நின்று பசுவினைக் குறித்துள்ளது.

கரடி எனும் அஃறிணைப் பொருள் பாகுபாட்டின் கீழ் உளியம் (81-1), எண்கு (15-16) ஆகியன ஒரு பொருட் பன்மொழியாக இடம் பெறுகின்றன. 'உளி என்ற சொல்லிருந்தே உளியம் எனும் சொல் பிறந்துள்ளது. உளியம் என்பதற்கு உளிபோன்ற கூரிய நகங்களை உடைய கரடி' என்று அகரமுதலி பொருள் விளக்கம் தந்துள்ளது. ஆகவே கூரியநகம் உடைய கரடியைக் குறிப்பதற்காகவே உளியம் எனும் சொல் இலக்கியத்தில் எடுத்தாளப்பட்டுள்ளது. "எண்கு என்பதற்கு - கரியது" என அகரமுதலி சுட்டியுள்ளது. எனவே கருமைநிற பண்பினை வெளிப்படுத்தவே கரடி எனும் பெயரினை எண்கு எனும் சொல்லால் இலக்கியத்தில் குறித்துள்ளனர் எனலாம்.

அகநானூற்றில் யானை என்பதைக் குறிக்க பொங்கடி (44-1) குஞ்சரம் (92-3) நாகம் (3-12) வேழம் (12-1) வாரணம் (172-1) எனும் சொற்கள் எடுத்தாளப்பட்டுள்ளன. இதில் பொங்கடி எனும் சொல்லை பொங்கு + அடி எனப் பிரிக்கலாம். 'பொங்கு என்பதற்கு பருமை' என்று அகரமுதலி பொருள் விளக்கம் தந்துள்ளது. எனவே யானை பருத்த அடியை உடையதால் பொங்கடி எனப் பெயரிட்டு இருக்கலாம். குஞ்சரம், வேழம், வாரணம் எனும் சொற்கள் பொருள் வேறுபாடின்றி யானை என்பதைக் குறிக்கின்றன. நாகம் என்ற சொல்லின் வேர்ச்சொல் யாகு என்பதாகும். யாகு என்பதில் உள்ள யா என்பதற்கு செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் பேரகரமுதலி கருமைப்பொருண்மையினைக் குறிக்கும் ஓரெழுத்து ஒருமொழி என்று குறிப்பிடுகிறது எனவே யா என்னும் கருமைக்கருத்து மூலவேர் நாளடைவில் யாகு-நாகு-நாகு+அம்+நாகம் என்று மாறி கருமை நிறமுள்ள யானையையும் குறித்தது எனலாம்.

## பறவையினப் பெயர்கள்

போகில் (129-9) புள் (10-4) எனும் சொற்கள் பறவை எனும் பொதுப் பெயரை உணர்த்த ஆளப்பட்டுள்ளன. இதில் 'புள்' என்பதற்கு நீர்வாழ்பறவை என அகரமுதலி பொருள் விளக்கம் தந்துள்ளது. அகநானூற்றில் புள் எனும்

சொல் பொருள் வேறுபாடின்றி பறவை எனும் பொதுப்பெயரை உணர்த்தி நிற்கிறது. மயிலைக் குறிக்கும் தோகை, மஞ்ஞை எனும் சொற்களில் தோகை எனும் சொல் மயிலில் தோகைக்கு ஆகி வந்துள்ளது.

வண்டு இனத்தைச் சுட்டும் ஒரு பொருள் பன்மொழிகளாக சிதர் (25-9) சுரும்பு (131-4) சிள்வீடு (89-6) ஞிமிறு (59-9) ஆகிய சொற்கள் கையாளப்பட்டுள்ளன. சிள்ளென இடையறாது ஒலிவிடுவதால் வண்டினை சிள்வீடு என்று அழைத்துள்ளனர். அதே போல் அகநானூற்றில் சிள்வீடு எனும் சொல் இடையறாது ஒலிக்கும் வண்டு இனத்தையே சுட்டி நிற்கிறது. "சுரும்பு மலைவண்டு" என்று அகரமுதலி விளக்கம் தந்துள்ளது. ஆனால் அகநானூற்றில் எவ்வித பொருள் வேறுபாடுமின்றி சுரும்பு எனும் சொல் வண்டு வகையைக் குறித்து நிற்கிறது.

## தாவர இனப் பெயர்கள்

அகநானூற்றில் தாவர இனங்களாக மூங்கில், பூ ஆகியன இடம் பெற்றுள்ளன. இவற்றில் மூங்கில் எனும் பொருட்புலத்தின் கீழ் அமை (18-17), கழை (8-8), காம்பு (88-13), முந்தூழ் (78-8), பணை (1-8), ஞெலி (39-9) வேய் (1-8) ஆகிய பெயர்கள் இடம் பெறுகின்றன. போது (25-4), மலர் (1-16) வீ (2-7) ஆகியன 'பூ' எனும் பொருட்பெயரினை உணர்த்தி நிற்கின்றன. பூ - அரும்பு, முகை, மொட்டு, போது, மலர், வீ எனும் நிலைகளில் வளர்ச்சியடைகிறது. எனவே 'போது' 'மலர்' 'வீ' எனும் சொற்கள் பூவின் வளர்ச்சி நிலைகளைக் குறித்து கையாளப்பட்டுள்ளன.

## கருவிப்பெயர்கள்

அகநானூற்றில் அம்பு எனும் பொருட் பாகுபாட்டின் கீழ் அம்பு (13-10), தொடை (35-6) ஏ (111-2), கணை (24-14) பகழி (132-4) எனும் சொற்கள் ஒரு பொருட் பன்மொழியாக இடம் பெறுகின்றன. 'தொடை' எனும் சொல் நாணில் வைத்து தொடுக்கப்படுவதால் தொடை எனப்பெயர் பெற்றிருக்கலாம். "ஏ - என்பதற்கு எய்யுந்தொழில்" என அகரமுதலி பொருள் விளக்கம் தந்துள்ளது. எனவே இத்தொழிலை அடிப்படையாகக் கொண்டு 'ஏ' எனும் சொல் அம்பினைக் குறித்து நின்றது எனலாம். அகநானூற்றில் ஏ எனும் சொல் தலைவன் பிரிவின் கண்ணும் 'தொடை' எனும் சொல் மறவரின் செயலைக் குறிப்பிடும் இடத்திலும் கையாளப்பட்டுள்ளது. அயில் (167-18) எஃகம் (77-18) எஃகு (71-12) ஆகிய சொற்கள் வேல் கருவியைக் குறித்து வந்துள்ளன. இங்கு

இரும்பினால் (எஃகு) செய்யப்பட்ட கருவி என்பதை அடிப்படையாகக் கொண்டு வேல் எனும் பெயர் எஃகம் எஃகு எனும் சொற்களால் குறித்துள்ளனர்.

## ஐம்பூதங்களின் பெயர்

அகநானூற்றில் ஐம்பூதங்களின் பெயர்களாக ஒளி, நீர், காற்று, தீ, மழை ஆகியன இடம் பெற்றுள்ளன. அகநானூற்றில் நீரினைக் குறிக்கும் பெயர்களாக அறல் (19-13) அருவி (28-4) ஆம் (1-12) எனும் சொற்கள் எடுத்தாளப்பட்டுள்ளன. காற்று என்பதைக் குறிக்க கால் (9-7) வளி (1-17) எனும் சொற்கள் சுட்டப்பட்டுள்ளன. இதில் கால் என்பதிலிருந்தே காற்று எனும் சொல் வந்தமையால் 'கால்' எனும் சொல் காற்றினை உணர்த்தி நிற்கிறது எனலாம்.

அகநானூற்றில் தீ எனும் பொருட்புலத்தின் கீழ் எரி (29-15) அழல் (1-10) தழல் (188-11) கனல் (73-15) சுடர் (6-16) நெருப்பு (11-2) ஞெகிழி (172-13) ஆகிய சொற்கள் இடம் பெற்றுள்ளன. அகநானூற்றில் தீ எனும் சொல் உள்ள இடத்தில் நெருப்பு என்ற சொல்லையும், நெருப்பு என்ற சொல் உள்ள இடத்தில் தீ என்பதை மாற்றினாலும் பொருள் மாறுபடுவதில்லை. 'அழல்' எனும் சொல் ஞாயிற்றின் நெருப்பைச் சுட்டி வந்துள்ளது. சுடர் என்ற சொல் சுடு என்பதில் இருந்து உருவாகியுள்ளது. எனவே சுடுதல் தொழிலை அடிப்படையாகக் கொண்டு சுடர் எனும் சொல் நெருப்பை உணர்த்தி வந்தது எனலாம். தழல், கனல், ஞெகிழி எனும் சொற்கள் எவ்வித வேறுபாடுமின்றி நெருப்பினை உணர்த்தி வந்துள்ளன.

## ஞாயிற்றைக் குறிக்கும் பெயர்கள்

சூரியனைக் குறிக்கும் ஒரு பொருட் பன்மொழிகளாக சுடர் (47-9) கனலி (55-1) திகிரி (53-2) பகலோன் (20: -8) பருதி (37-15) ஆகிய சொற்கள் ஆளப்பட்டுள்ளன. இவற்றில் பகலோன் எனும் சொல் சூரியன் பகலில் தெரிவதால் பகலோன் எனப் பெயர் பெற்றிருக்கலாம். சூரியன் பொருளுக்கு வெப்பமும் வெளிச்சமும் உள்ளதால் சுடர், கனலி முதலிய சொற்கள் ஆளப்பட்டுள்ளன.

ஒரு பொருட் பல சொற்கள் மொழியின் வளர்ச்சிக்கு முக்கியப் பங்கு வகிக்கின்றன. இலக்கியங்களில் ஒரு பொருட் பல சொற்கள் அதிகம் பயன்படுத்தப்படுகின்றன. அகநானூற்றில் ஒரு பொருட் பன்மொழியாக இடம் பெறும் பெயர்ச்சொற்கள் வேறுபாடு காண இயலா வண்ணம் ஒற்றுமையுடைய சொற்களாக இருப்பினும், பொருளினைக் குறிக்கும் பல பெயர்ச் சொற்கள் பொருள் நிலையில் நுட்பமான வேறுபாட்டைப் புலப்படுத்துகின்றன.

# ஆசிரியர் குழு

திரு. இரா. குருசாமி பி.ஏ.,

பெரும்புலவர் திரு. இரா. இளங்குமரன்

முனைவர் திரு. தமிழண்ணல்

முனைவர் திரு. சுப. அண்ணாமலை

முனைவர் திரு. கதிர் மகாதேவன்

முனைவர் திரு. க. சின்னப்பா


தொடர்பு முகவரி

ஆசிரியர்

செந்தமிழ்
மதுரைத் தமிழ்ச் சங்கம்
54, தமிழ்ச் சங்கச் சாலை
மதுரை - 625 001
தொலைபேசி : 0452 - 6575615



பதிப்பாசிரியர் : **இரா. அழகுமலை,** எம்.ஏ., எம்.ஃபில்.
செயலாளர், மதுரைத் தமிழ்ச் சங்கம், மதுரை – 1
தொலைபேசி : 0452 - 6575615

அச்சிடுவோர் : தவம் பிரிண்டர்ஸ், 32, மேலமாசி வீதி, மதுரை – 1

RNI Regd. No. 5508/57 November 2011 MA/130/2011-2013

Posted at Madurai BPC on 25th of every month


# செந்தமிழ்க் கல்லூரி

## மதுரைத் தமிழ்ச் சங்கம்



(தேசியத் தரக்கட்டுப்பாட்டுக் குழுவின் B+ தேசியத்தரம் பெற்றது)

மதுரை காமராசர் பல்கலைக்கழகத்துடன் இணைக்கப்பெற்றது.

54, தமிழ்ச் சங்கம் சாலை, மதுரை - 625 001 ✆ 0452 - 2343707, நிகரி : 0452 - 4373475

**2011 - 2012ஆம் ஆண்டிற்கான சேர்க்கை நடைபெறுகிறது**

- இளம் இலக்கியம்
- இளங்கலை
- முதுகலை
- இளம்நிலை ஆய்வாளர்
- முதுநிலை ஆய்வாளர்
- பி.ஏ., பி.லிட்., எம்.ஏ., மாணவர்களுக்கான தமிழாசிரியர் பயிற்சி

**நன்கொடை கிடையாது**

**சிறப்பு அம்சங்கள்**

மாணவர்களுக்குக் கணினிப் பயிற்சி, யோகா மற்றும் தியானப் பயிற்சி, ஓலைச்சுவடி மற்றும் கல்வெட்டுப் பயிற்சி, பேச்சுக்கலைப் பயிற்சி, படைப்பாக்கத் திறன், விரிவுரையாளர் தகுதித் தேர்வுப் பயிற்சி போன்றவற்றில் சிறப்புப் பயிற்சி அளிக்கப்படுகிறது.

**செம்மொழித் திட்டத்தின் கீழ் பணி வாய்ப்புக்கள் உள்ளன**

முனைவர் மு. மீனா
முதல்வர் (பொறுப்பு), செந்தமிழ்க் கல்லூரி

இரா. குருசாமி
செயலாளர், செந்தமிழ்க் கல்லூரி


அனுப்புநர்,
**செயலாளர்**
மதுரைத் தமிழ்ச் சங்கம்
மதுரை - 625 001

From
**SECRETARY**
Madurai Tamilsangam
Madurai - 625 001
TAMILNADU, S. INDIA

BUSINESS POST CENTRE
POSTAGE PRE PAID
26 NOV 2011
MADURAI 625001

பெறுநர் / To

திருமிகு.இரா.அழகுமலை
எம்.ஏ.,எம்.பில்., அவர்கள்,
21-A முத்துராமலிங்கத் தேவர் தெரு,
கோச்சடை,
மதுரை 625 010.

Printed by V. Govindarajan, published by R. ALAGUMALAI M.A., M.Phil. on behalf of Madurai Tamil Sangam, Madurai and printed at Davam Printers, 32, West Masi Street, Madurai - 1, and published at 54, Tamil Sangam Road, Madurai. Editor R. ALAGUMALAI M.A., M.Phil.